ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு (தொடர்–18) பக்கம் 3

காதியானும் அதன் புனித, வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும் (தொடர்–4) பக்கம் 8

யார் நல்ல மனிதர்? பக்கம் 14

உலக அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான திறவுகோல் (தொடர்ச்சி...) பக்கம் 20



மாத இதழ்


# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | June 2023 | Vol. 2 - Issue No. 7



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340



# திருக்குர்ஆன்

اِنَّ اَوَّلَ بَیۡتٍ وُّضِعَ لِلنَّاسِ لَلَّذِیۡ بِبَکَّۃَ مُبٰرَکًا وَّ هُدًی
لِّلۡعٰلَمِیۡنَ ۚ فِیۡهِ اٰیٰتٌۢ بَیِّنٰتٌ مَّقَامُ اِبۡرٰهِیۡمَ ۬ۚ
وَ مَنۡ دَخَلَهٗ کَانَ اٰمِنًا ؕ وَ لِلّٰهِ عَلَی النَّاسِ حِجُّ الۡبَیۡتِ
مَنِ اسۡتَطَاعَ اِلَیۡهِ سَبِیۡلًا ؕ

எல்லா மக்களு(டைய பயனு)க்காகவும் முதன் முதலாக உருவாக்கப் பெற்ற இல்லம் மக்காவிலுள்ளதாகும். அது எல்லா உலகங்களுக்கும் அருளுக்குரியதும் நேர்வழிக்குரியதுமா(ன இடமா)கும். அதில் ஒளிமயமான பல அடையாளங்கள் உள்ளன. (அது) இப்ராஹீம் நின்ற இடமாகும். அதில் நுழைபவர் அமைதி பெற்றவராகி விடுகின்றார். அந்த வீட்டின் பக்கம் செல்ல வாய்ப்புக் கிடைத்த மக்கள் ஹஜ் செய்வதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான். (3:97,98)




# ஹதீஸ்

عَنْ اَبِیْ هُرَیْرَةَ رَضِیَ اللهُ عَنْهُ قَالَ قَالَ رَسُوْلُ اللهِ
صَلَّی اللهُ عَلَیْهِ وَسَلَّمَ مَنْ حَجَّ لِلّٰهِ فَلَمْ یَرْفُثْ
وَلَمْ یَفْسُقْ رَجَعَ کَیَوْمٍ وَلَدَتْهُ اُمُّهٗ۔
(مشکوٰۃ کتاب المناسک)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“எவர் அல்லாஹ்வுக்காக ஹஜ் செய்து, பிறகு வீணான விஷயங்களைப் பேசாமலும், தீமைகள் செய்யாமலும் இருக்கிறாரோ, அவர் அங்கிருந்து திரும்பும் போது, அவருடைய தாய் அவரைப் பெற்றெடுத்த நாளில் இருந்தது போன்று தூய்மையானவராகத் திரும்புவார்.” (மிஷ்காத் கிதாபுல் மனாஸிக்)



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

18

- மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை

## பிற மதத்தவர்களின் சந்தேகங்கள்

1888–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4–ஆம் தேதி, முதல் பஷீர் மரணித்தார். இஸ்லாத்தின் எதிரிகள் அதனைக் கண்டு கூக்குரல் எழுப்பினர். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மீது இல்லாத கட்டுக்கதைகளையெல்லாம் அவிழ்த்து விட்டனர். அன்னாரின் சொந்த மதத்தைச் சேர்ந்தவர்களே அதனைக் கண்டு துன்பத்திற்குள்ளாயினர். இந்த சந்தர்ப்பத்தில் எழுப்பப்பட்ட ஆட்சேபணைகளைப் பற்றி வேறோர் இடத்தில் விவரிக்கப் –பட்டிருக்கிறது. இந்த இடத்தில் விவரிக்க வேண்டிய முக்கியமான விஷயம் ஒன்று உள்ளது.

பல ஆண்டுகளாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது ஆற்றல், நேரம், கவனம், வசதி வாய்ப்புகள் அனைத்தையும் இஸ்லாத்திற்குத் தொண்டாற்றுவதில் செலவழித்தார்கள். இஸ்லாத்திற்கு எதிரான இயக்கங்களின் வளர்ச்சியைத் தடை செய்யும் விதத்தில் பல நூல்களையும், ஆயிரக்கணக்கான பிரசுரங்களையும் வெளியிட்டதோடு விவாதங்களையும், சொற்பொழிவுகளையும் நிகழ்த்தினார்கள். ஆரிய சமாஜத்தின் வளர்ச்சியையும், கிறித்தவ மதத்தின் வளர்ச்சியையும் தடுத்து நிறுத்தினார்கள். உலகத்தின் கவனத்தைத் தம் பக்கம் ஈர்த்தார்கள். இஸ்லாத்தின் தனிச் சிறப்பையும், உன்னதத் தன்மையையும் எடுத்துக் காட்டுவதே காலமெல்லாம் அவர்களுடைய முயற்சிகளில் முக்கியத்துவம் பெற்று விளங்கியது. அன்னாரின் ஆற்றல் மிக்க வாதங்கள் மட்டுமல்லாமல், இறையடையாளங்கள் மூலமும் அதனை நிறுவ வேண்டும் என்பதே அவர்களின் ஆவலாக இருந்தது.

இந்த நோக்கத்திற்காக வெளியிடப்பட்ட பிரசுரங்களை அவர்கள் உலகம் முழுவதும் அனுப்பி வைத்தார்கள். இந்த வகையான முயற்சிகளின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் பற்றி விளக்கமாகக் கூறியிருந்தார்கள். இதற்கென அவர்கள் பரிசுத் தொகையையும் அறிவித்ததோடு, தவறினால் அபராதம் செலுத்தவும் உறுதி அளித்திருந்தார்கள். இதற்கென நியமிக்கப்பட்டிருந்த சோதனைக் காலத்தையும் ஓராண்டு என்பதிலிருந்து 40 நாட்களாகக் குறைத்திருந்தார்கள். ஆனால் சோதித்துப் பார்க்க யாரும் முன்வரவில்லை.

ஆகவே மாற்று வழியாக இறைவன் பேரில் முன்னறிவிப்புகளை வெளியிட்டார்கள். உலகத்தைப் படைத்த இறைவன் தம்மோடு மிகவும் நெருக்கமாக இருப்பதாக வாதம் புரிந்தார்கள். அவனே தம்மை இந்தப் பணிக்காக நியமித்திருப்பதாகவும், அவனே தமக்கு முழுமையாகவும், சிறப்பாகவும் உதவி செய்து வருவதாகவும் வாதம் புரிந்தார்கள். அவர்கள் இறை ஆற்றல் மூலம் இயக்கவும், நிரப்பவும் பட்டார்கள். அவர்களைப் பொருத்தவரையில் அதுவே மார்க்கத்தின் உயரிய தன்மையை நிலைநாட்டுவதற்குள்ள ஒரே வழியாகத் தெரிந்தது.




ஆனால் இஸ்லாத்தின் இந்தத் தன்மையை எந்த அளவுக்கு வலியுறுத்தினார்களோ, அந்த அளவுக்குச் சூழ்நிலை குழப்பமானது.

நாடு முழுதிலிருந்தும் நன்மக்கள் அன்னாரைச் சுற்றி சூழ்ந்து கொண்டார்கள் என்பது உண்மையே. ஆனால் மொத்தமான விளைவு ஒன்று நம்பிக்கையூட்டுவதாக

அமையவில்லை. இதன் காரணமாக அவர்கள் தம்முடைய கொள்கை முழுவதையும் மறுபரிசீலனை செய்தார்கள். முஸ்லிம்களின் பார்வையும் சந்தேகத்திற்குரியதாக இருந்தது. அவர்கள் தம்முடைய முன்னறிவிப்புகளுக்கும், இறை அடையாளங்களுக்கும் அதிக அழுத்தம் கொடுக்காதிருந்தால் நன்றாக இருக்கும் என அன்னாரின் நண்பர்கள் ஆலோசனை கூறி பரிவாக கடிதங்கள் எழுதினர். அவர்களுள் சிலர் இன்னும் ஒருபடி மேலே சென்று, வருங்காலத்தில் நடைபெறவிருக்கும் செய்திகளைப் பற்றி முன்னறிவிப்புச் செய்வது ஒன்றும் அன்னார் இறைவன் புறமிருந்து தோன்றியிருக்கிறார்கள் என்பதற்கான முழுமையான சான்றாக அமையாது என்று கூறினர். மேலும் ஒருவர் எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்த போதிலும் அவர் எதிர்காலத்தில் நடக்க இருக்கின்றவற்றைத் தோராயமாக யூகித்துச் சொல்வது என்பது சாத்தியமே என்றும் அவர்கள் கூறி வந்தனர். இந்த வகையான தற்காப்பு நடவடிக்கைகள் இஸ்லாத்திற்கு அதிக நன்மை பயக்காது என்றும் அவர்கள் கருதினர். முஸ்லிம் நண்பர்களின் இது போன்ற போக்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைச் சிந்திக்க வைத்தது. விஷயம் அவர்கள் நினைத்ததை விட மோசமாக இருப்பது தெளிவானது. அவர்கள் இறைவனோடு வாழ்கிறார்கள்; இறைவனிடம் இருக்கிறார்கள் என்பதில் அவர்களுக்கு முழுமையான நம்பிக்கை இருந்தது. இஸ்லாத்தைப் பற்றிய அவர்களுடைய சொந்த அனுபவம் முற்றிலும் உண்மையானதாகும். எனவே அவர்களுடைய சக மதத்தவர்களிடம் ஏதோ தவறு இருந்தாக வேண்டும். அதுதான் உண்மையும் கூட. அவர்கள் தம்மளவில் ஆன்மீக ரீதியாக வெறுமையாகி விட்டார்கள். நேரிய பாதையிலிருந்து அவர்கள் வெகுதூரம் விலகிச் சென்று விட்டார்கள்.

## பைஅத் பெறுமாறு பெறப்பட்ட கட்டளைகள்

1988–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் நாள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒரு முக்கியமான பிரசுரத்தை வெளியிட்டார்கள். அது அமிர்தசரஸிலுள்ள ரியாஸே ஹிந்த் அச்சகத்தில் அச்சிடப்பட்டிருந்தது. அதன் தலைப்பு 'ஹக்கானீ தக்ரீர் பர் வாகியா வஃபாத்தே பஷீர்' (பஷீரின் இறப்பு சம்பவம் தொடர்பான உண்மையான சொற்பொழிவு) என்பதாகும்.

இந்தப் பிரசுரத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எதிர்ப்பின் பல்வேறு நிலைகளை விபரித்த பின் வேதனையாடு பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்கள்:

மக்கள் தம்மோடு ஒத்துப் போகிறார்களா இல்லையா என்பதைப் பற்றித் தமக்குக் கவலை இல்லை. தம்முடைய வாதத்தை மக்கள் ஏற்றுக் கொள்கிறார்களா இல்லையா என்பதைப் பற்றியும் தமக்குக் கவலை இல்லை. அவர்கள் தம்மைப் போற்றுகிறார்களா அல்லது தூற்றுகிறார்களா என்பதைப் பற்றியும் தமக்குக் கவலை இல்லை. இவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதை விடத் தமக்கு வேறு முக்கியமான பணிகள் உள்ளன. உயிருள்ள இறைவன் மீது கவனம் செலுத்தும் பொருட்டுத் தாம் பிற மக்களை விட்டு விலகி இருந்தார்கள். அன்னாரின் மதத்தைச் சேர்ந்தவர்களுள் சிலரே அவர்களை வெறுப்புடன் நோக்கினாலும் கூட தாம் தமது பணியைத் தொடர்ந்து செய்யப் போவதாகக் கூறினார்கள் தம்மளவுக்கு அவர்களுக்கு இறைவனைப் பற்றிய அறிவு இல்லாத காரணத்தால், தாம் அவர்களை, தம் வழியில் செல்லட்டும். நாம் நம் வழியில் செல்வோம். உண்மையில் இது பாதைகள் பிரியும் வேளையாகும். வெளியிலிருந்து வரும் தாக்குதல்களைச் சமாளிப்பது மட்டுமல்லாமல் தம்முடைய சக மதத்தவர்கள் மத்தியில் உள்ள மாற்று சிந்தனையாளர்களையும், கிளர்ச்சிக் –காரர்களையும் எதிர்கொள்ள வேண்டிய ஒரு கட்டத்தை அடைந்திருக்கிறோம் என்பதை அன்னார் (அலை) தெளிவாகப் புரிந்து கொண்டார்கள்.




உள்ளுக்குள்ளேயே ஒரு பிரச்சினை இருந்ததையும், அங்கு ஒரு புயலே உருவாகிக் கொண்டிருந்ததையும் அவர்கள் கண்டார்கள். அந்தச் சூழ்நிலையை அவர்கள் உடனடியாகவும், நேரடியாகவும் சந்தித்தார்கள். தமது நண்பர்களை நோக்கி தங்கள் விஷயத்தில் அவர்கள் கவனமாக இருக்க வேண்டும் என எச்சரித்தார்கள். உலகத்தின் மீது கொண்ட பற்று அவர்களுடைய இதயங்களை செயலிழக்கச் செய்துள்ளது. ஆன்மீகத் தொழு நோய் அவர்களுடைய உறுப்புகளைப் பாதித்திருக்கின்றது. தாம் கூறிய முன்னறிவிப்புகளின் மூலமும், நிகழ்த்திக் காட்டிய தெய்வீக அடையாளங்களின் மூலமும் வெளிப்பட்ட தெளிவான இறைவனின் ஆற்றலைக் கண்டுணர முடியாத அளவுக்கு அவர்கள் குருடர்களாக இருந்தனர். தமது வாதத்திற்கு ஆதாரமாக அமைந்த உறுதியான சான்றுகளை நேரடியாகக் கண்டுணர வரும்படி முஸ்லிம் மார்க்கப் பெரியார்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். இஸ்லாம் என்பது மனதளவில் சித்து வேலை காட்டும் ஒரு மார்க்கமல்ல; அது ஓர் உயிருள்ள மார்க்கமாகும். உண்மையிலேயே அதன்படி செயல்படுபவர் இறை அறிவிப்புகளைப் பெறும் நிலையை அடைகிறார் என்று தெளிவாகக் கூறினார்கள்.

அந்தப் பிரசுரத்தின் இறுதியில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தாம் இறைவனிடமிருந்து பெற்ற ஒரு முக்கியமான செய்தியை உலக மக்களுக்குத் தெரிவித்தார்கள். அது இவ்வாறு அமைந்திருந்தது:

"இப்போது நான் மனித இனத்திற்குப் பொதுவாகவும், முஸ்லிம்களுக்குக் குறிப்பாகவும் தெரிவிக்க வேண்டிய செய்தி ஒன்று இருக்கிறது. அதன்படி உண்மையைத் தேடும் மக்கள் உண்மையான மார்க்கத்தையும், நேர்மையான வாழ்க்கையையும் அறிந்து கொள்வதற்காக என்னிடம் பைஅத் செய்ய வேண்டும் என நான் கட்டளையிடப்பட்டுள்ளேன். சோம்பேறித்தனத்தையும், நம்பிக்கையற்ற தன்மையையும் எல்லா விதமான அநீதிகளையும் அவர்கள் கைவிட வேண்டும். அப்போதுதான் இறையன்பு எனும் நீரூற்றின் பக்கம் அவர்கள் வழிநடத்தப்படுவார்கள். இதற்குத் தயாராக இருப்பவர்கள் மட்டும் என்னிடத்தில் வாருங்கள்! நான் அவர்களை நண்பர்களாக்கி அவர்களுடைய பாரத்தை எளிதாக்குவேன். அவர்கள் இறை கட்டளைகளை ஏற்று நடக்கத் தயாராக இருந்தால் என்னுடைய தனிப்பட்ட கவனத்தின் காரணமாகவும், துஆக்களின் காரணமாகவும் இறைவன் அவர்களுக்கு அருள்பாலிப்பான்."

இது இறைவனிடமிருந்து பெறப்பட்ட கட்டளையாகும். இதன் மூலம் அனைத்து மக்களுக்கும் அறிவிக்கின்றேன். அந்த இறையறிவிப்பின் அரபி வாசக(த்தின் பொருள்)ம் இதுவாகும்:

"நீர் முடிவெடுத்த பின்னர் இறைவன் மீது முழு நம்பிக்கை வைப்பீராக! நம்முடைய கட்டளைகளின்படி நம்முடைய கண்களுக்கு முன்னால் ஒரு பேழையைக் கட்டுவீராக! உம்முடைய கரங்களில் பைஅத் செய்வோர் தம்முடைய கைகளை இறைவனது கைகள் மேல் வைக்கின்றனர். இறைவனின் கை அவர்களுடைய கைகளின் மேல் இருக்கிறது."

ஏறத்தாழ 10 மாதங்களுக்கு முன் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இந்த இறையறிவிப்பைப் பெற்றார்கள்.

(தொடரும்....)

## 'எனக்குப் பின்னர்' எனும் சொல் தரும் பொருள்




'பஃதீ' بَعْدِى எனும் சொல்லுக்குப் பல பொருள்கள் இருந்தாலும் எனக்குப் பிறகு என்பதற்கு, என் மரணத்திற்குப் பிறகு என்ற பொருளும் உண்டு. திருக்குர்ஆனில் 61:7-வது வசனத்தில், "எனக்குப் பின்னர் வரப்போகின்ற அஹ்மது என்னும் பெயரைக் கொண்ட ஒரு தூதரைப் பற்றி நற்செய்தி வழங்குபவனாகவும் உங்களிடம் அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் தூதராவேன்" எனும் வசனத்தில் வரும் 'எனக்குப் பிறகு' என்பதற்கு 'என் மரணத்துக்குப் பிறகு' என்பதே பொருள். ஹஸ்ரத் ஈசா நபி (அலை) அவர்களே 'தம் மரணத்துக்குப் பிறகு' என்று ஒப்புதல் வாக்குமூலம் தந்துள்ளார்கள். இவ்வாறு பொருள் தரும் பிற வசனங்களைத் திருக்குர்ஆனில் காண்போம்:

1) யஃகூபிற்கு மரணம் வந்த நேரத்தில் நீங்கள் இருந்தீர்-களா? அவர் தன் மகன்களிடத்தில் எனக்குப் பின்னர் நீங்கள் எதனை வணங்குவீர்கள் என்று கேட்டார். (2:134)
2) அவர் (யூஸுஃப்) மரணமடைந்தபோது, அவருக்குப் பின்னர் எந்தத் தூதரையும் அல்லாஹ் ஒருபோதும் அனுப்ப மாட்டான் என்று நீங்கள் கூறினீர்கள். (40:35)
3) நீங்கள் (நபிக்கு) அவருக்குப் பின்னர் அவருடைய மனைவி-களை ஒருபோதும் மணந்து கொள்ளவும் கூடாது. (33:54)
4) சுலைமான், 'என் இறைவா! எனக்குப் பிறகு எவருக்கும் கிடைக்காத ஆட்சியை எனக்கு வழங்குவாயாக' என்று கூறினார். (38:36)
5) மூசாவுக்குப் பின்னர் தோன்றிய இஸ்ராயீல் மக்களின் தலைவர்களைப் பற்றி நீர் கேள்விப்பட்டதில்லையா? (2:247)
6) நாம் நூஹுக்குப் பிறகு எத்தனையோ தலைமுறையினர்-களை அழித்திருக்கின்றோம். (17:18)
7) (மூசாவுக்கு) அவருக்குப் பிறகு நாம் தூதர்களை அவரது அடிச்சுவட்டில் அனுப்பி வைத்தோம். (2:88)
8) நிச்சயமாக அவருக்குப் (இப்ராஹீம்) பின்னரே தவ்ராத்தும் இஞ்சீலும் இறக்கப் பெற்றன. (3:66)
9) நாம் நூஹுக்கும் அவருக்குப் பின்னர் வந்த தூதர்-களுக்கும் வஹீயை அருளியது போன்று... (4:164)
10) அவர்களுக்குப் பின்னர் நாம் மூஸாவையும் ஹாரூனை-யும் நம் அடையாளங்களுடன் ஃபிர்அவ்னிடமும் அவன் தலைவர்களிடமும் அனுப்பினோம். (10:76)

எனவே, அஹ்மது எனும் பெயர் கொண்ட தூதர் தோன்றுவதற்கு முன்னரே ஈஸா நபி மரணம் அடைந்து விட்டார் என்று 61:7 வசனத்திலிருந்து நாம் விளங்கிக் கொள்கிறோம்.

**A.P.Y. அப்துல் காதிர்**

# 700 இறை கட்டளைகள்

2

இப்னு யூசுப்

### திருக்குர்ஆனை காலையில் ஓதுவது

وَقُرْاٰنَ الْفَجْرِ ؕ اِنَّ قُرْاٰنَ الْفَجْرِ كَانَ مَشْهُوْدًا

அதிகாலையில் (குர்ஆன்) ஓதுவதையும் (கட்டாயமாக்கிக் கொள்வீராக). அதிகாலையில் குர்ஆன் ஓதுவது (அல்லாஹ்விடத்தில்) நிச்சயமாக ஏற்றுக் கொள்ளப்படும் (ஒரு) செயலாகும். (பனீ இஸ்ராயீல் 17:79)

### திருக்குர்ஆனை நிறுத்தி நிதானமாக ஓத வேண்டும் என்ற கட்டளை

وَلَا تَعْجَلْ بِالْقُرْاٰنِ مِنْ قَبْلِ اَنْ يُّقْضٰٓى اِلَيْكَ وَحْيُهٗ

குர்ஆனின் வஹீ முழுமையாக உமக்குக் கிடைப்பதற்கு முன் நீர் அதற்காக அவசரப்படாதிருப்பீராக. (தாஹா 20:115)

### இறையருட்கள் மற்றும் இறைக் கட்டளைகளை எண்ணி அதை நினைவுகூர்வது

وَاذْكُرُوْا نِعْمَتَ اللّٰهِ عَلَيْكُمْ وَمَاۤ اَنْزَلَ عَلَيْكُمْ مِّنَ الْكِتٰبِ وَالْحِكْمَةِ يَعِظُكُمْ بِهٖ ؕ

மேலும் அல்லாஹ் உங்களுக்கு வழங்கிய அருட்கொடையையும், அவன் உங்களுக்கு இறக்கிய வேதத்தையும், ஞானத்தையும் நினைத்துப் பாருங்கள். இதன் மூலம் அவன் உங்களுக்கு அறிவுரை கூறுகின்றான். (அல் பகரா 2:232)

وَّاذْكُرُوْا مَا فِيْهِ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ

மேலும் நீங்கள் இறையச்சம் உள்ளவர்கள் ஆவதற்காக அதிலுள்ளவற்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள் (என்றோம்.) (அல் பகரா 2:64)

### திருக்குர்ஆனை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பது தொடர்பாக

اَفَلَا يَتَدَبَّرُوْنَ الْقُرْاٰنَ اَمْ عَلٰى قُلُوْبٍ اَقْفَالُهَا

அவர்கள் குர்ஆனைச் சிந்தித்துப் பார்ப்பதில்லையா? அல்லது அவர்களது உள்ளங்கள் உள்ளிருந்தே பூட்டப்பட்டிருக்கின்றனவா? (முஹம்மத் 47:25)

كِتٰبٌ اَنْزَلْنٰهُ اِلَيْكَ مُبٰرَكٌ لِّيَدَّبَّرُوْۤا اٰيٰتِهٖ وَلِيَتَذَكَّرَ اُولُوا الْاَلْبَابِ

அ(வ்விறை)வனின் வசனங்களை அவர்கள் ஆராய்ந்து பார்ப்பதற்காகவும், அறிவுடையவர்கள் அறிவுரை பெறுவதற்காகவும் சிறப்பு மிக்க இவ்வேதத்தை நாம் உமக்கு இறக்கினோம். (ஸாத் 38:30)

### அனைத்து பிரச்சனைக்கான தீர்வும் திருக்குர்ஆனிலே உள்ளது

مَا فَرَّطْنَا فِى الْكِتٰبِ مِنْ شَىْءٍ ثُمَّ اِلٰى رَبِّهِمْ يُحْشَرُوْنَ

இந்த வேதத்தில் எதனையும் விட்டு வைக்கவில்லை. பின்னர் அவர்கள் தங்கள் இறைவனிடமே ஒன்று சேர்க்கப்படுவார்கள். (அல் அன்ஆம் 6:39)

### திருக்குர்ஆன் தெளிவாக மற்றும் விரிவாக உள்ளதால் அதிலிருந்து நீங்கள் ஞானத்தைப் பெற வேண்டும்.

اِنَّا جَعَلْنٰهُ قُرْءٰنًا عَرَبِيًّا لَّعَلَّكُمْ تَعْقِلُوْنَ ۚ

நிச்சயமாக நீங்கள் அறிந்து கொள்வதற்காக, நாம் இதனைத் தெளிவான அரபு மொழியில் இறக்கினோம். (அஸ் ஸுக்ருஃப் 43:4)

### ஸஜ்தா திலாவத்திற்கான கட்டளை

اِذَا تُتْلٰى عَلَيْهِمْ اٰيٰتُ الرَّحْمٰنِ خَرُّوْا سُجَّدًا وَّبُكِيًّا

இவர்களின் முன் அளவற்ற அருளாள(னாகிய இறைவ)னின் வசனம் ஓதிக்காட்டப்பட்ட பொழுது இவர்கள் சிரம் பணிந்தவர்களாகவும், அழுதவர்களாகவும் வீழ்ந்தனர். (மர்யம் 19:59)



وَاِذَا قُرِئَ عَلَيْهِمُ الْقُرْاٰنُ لَا يَسْجُدُوْنَ ؕ

அவர்களுக்குக் குர்ஆன் ஓதிக் காட்டப்படும்போது, அவர்கள் சிரம் தாழ்த்தி வணங்குவதில்லை. (அல் இன்ஷிகாக் 84:22)

### அல்லாஹ்வின் வேதத்தை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும்

خُذُوْا مَاۤ اٰتَيْنٰكُمْ بِقُوَّةٍ

மேலும் நாம் உங்களுக்கு கொடுத்ததை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். (அல் பகரா 2:64)

### இறை வேதத்தைப் பின்பற்ற வேண்டும்

وَهٰذَا كِتٰبٌ اَنْزَلْنٰهُ مُبٰرَكٌ فَاتَّبِعُوْهُ وَاتَّقُوْا لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ ۙ

நாம் இறக்கிய இது ஓர் அருள் நிறைந்த வேதமாகும். எனவே நீங்கள் இதனைப் பின்பற்றுங்கள். உங்களுக்குக்

கருணை காட்டப்பட இறையச்சத்தைக் கைக்கொள்ளுங்கள். (அல் அன்ஆம் 6:156)

## மூதாதையர்களின் கொள்கைக்கு எதிராக திருக்குர்ஆனின் உண்மையான போதனையைப் பின்பற்ற வேண்டும்

وَاِذَا قِيْلَ لَهُمُ اتَّبِعُوْا مَاۤ اَنْزَلَ اللّٰهُ قَالُوْا بَلْ نَتَّبِعُ مَاۤ اَلْفَيْنَا عَلَيْهِ اٰبَآءَنَا ؕ
اَوَلَوْ كَانَ اٰبَآؤُهُمْ لَا يَعْقِلُوْنَ شَيْـًٔـا وَّلَا يَهْتَدُوْنَ

மேலும், அல்லாஹ் இறக்கியதைப் பின்பற்றுங்கள் என்று அவர்களிடம் கூறப்பெற்றால், அவ்வாறு அன்று; எங்கள் மூதாதையர்கள் எவ்வழியில் இருக்கக் கண்டோமோ அவ்வழியைத்தான் நாங்கள் பின்பற்றுவோம் என அவர்கள் கூறுகின்றனர். அவர்களின் மூதாதையர்கள் எதையுமே அறியாத -வர்களாயும், நேரான வழியில் செல்லாதவர்களாயும் இருந்தாலுமா (அவர்கள் அவ்வாறு செய்வர்)? (அல் பகரா 2:171)

## கிறித்தவர்களுக்கு புதிய ஏற்பாட்டின் படியே தீர்ப்பளிக்க வேண்டும்

وَلْيَحْكُمْ اَهْلُ الْاِنْجِيْلِ بِمَاۤ اَنْزَلَ اللّٰهُ فِيْهِ ؕ وَمَنْ لَّمْ يَحْكُمْ
بِمَاۤ اَنْزَلَ اللّٰهُ فَاُولٰۤٮِٕكَ هُمُ الْفٰسِقُوْنَ

நற்செய்தியுடையவர்கள் அல்லாஹ் அதில் இறக்கியதற் -கேற்ப தீர்ப்பளிக்க வேண்டும். அல்லாஹ் இறக்கியதற்கேற்ப தீர்ப்பளிக்காதவர்களே தீயவர்கள். (அல் மாயிதா 5:48)

## ஈமான் (நம்பிக்கை) தொடர்பான விஷயங்கள்

### அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரின் மீது நம்பிக்கை கொள்ளுதல்

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اٰمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ

நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்விடத்தும், அவனுடைய தூதரிடத்தும் நம்பிக்கை கொள்ளுங்கள். (அந்நிஸா 4:137)

وَمَا لَكُمْ لَا تُؤْمِنُوْنَ بِاللّٰهِ ۚ وَالرَّسُوْلُ يَدْعُوْكُمْ لِتُؤْمِنُوْا بِرَبِّكُمْ
وَقَدْ اَخَذَ مِيْثَاقَكُمْ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ

நீங்கள் உங்கள் இறைவனிடம் நம்பிக்கை கொள்ள வேண்டுமென்று, உங்களைத் தூதர் அழைக்கும்போது, நீங்கள் அல்லாஹ்விடம் நம்பிக்கை கொள்ளாமலிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது? நீங்கள் உண்மையிலேயே நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால், ஏற்கனவே அவன் உங்களிடம் ஒரு வாக்குறுதியும் வாங்கியுள்ளான். (அல் ஹதீது 57:9)

### வேதத்தின் (குர்ஆன்) மீது நம்பிக்கை கொள்ளுதல்

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اٰمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ وَالْكِتٰبِ الَّذِىْ نَزَّلَ عَلٰى رَسُوْلِهٖ

நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்விடத்தும், அவனுடைய தூதரிடத்தும், அவன் தனது தூதருக்கு இறக்கிய இவ்வேதத் -திடத்தும் நம்பிக்கை கொள்ளுங்கள். (அந்நிஸா 4:137)

### முந்தைய வேதங்கள், மலக்குமார்கள் மற்றும் இறுதிநாள் மீது நம்பிக்கை கொள்ளுதல்

وَاٰمِنُوْا بِمَاۤ اَنْزَلْتُ مُصَدِّقًا لِّمَا مَعَكُمْ وَلَا تَكُوْنُوْۤا اَوَّلَ كَافِرٍۢ بِهٖ ۖ

மேலும் (இப்போது) நான் இறக்கிய (வேதமாகிய இ)தன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். இது உங்களிடம் உள்ள (வேதத்)தை(யும்) உண்மைப்படுத்துகின்றது. இதனை மறுப்பவர் -களுள் நீங்கள் முதல் ஆளாகி விடாதீர்கள். (அல் பகரா 2:42)



وَمَنْ يَّكْفُرْ بِاللّٰهِ وَمَلٰۤٮِٕكَتِهٖ وَكُتُبِهٖ وَرُسُلِهٖ وَالْيَوْمِ الْاٰخِرِ فَقَدْ ضَلَّ ضَلٰلًاۢ بَعِيْدًا

அல்லாஹ்வையும், அவனுடைய வானவர்களையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், இறுதி நாளையும், நிராகரிக்கின்றவன் மிகவும் மோசமான தவறான வழியில் சென்றுவிட்டான் (என அறிக). (அந்நிஸா 4:137)

وَالَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِمَاۤ اُنْزِلَ اِلَيْكَ وَمَاۤ اُنْزِلَ مِنْ قَبْلِكَ ۚ

உமக்கு அருளப்பட்டதன் மீதும், உமக்கு முன்னர் அருளப் -பட்டதன் மீதும் அவர்கள் நம்பிக்கை கொள்வர். (அல் பகரா 2:5)

### ஒளியின் மீது நம்பிக்கை கொள்ளுதல்

فَاٰمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ وَالنُّوْرِ الَّذِىْۤ اَنْزَلْنَا ؕ

எனவே நீங்கள் அல்லாஹ்விடத்தும், அவனது தூதரிடத்தும், நாம் இறக்கிய ஒளியி(ன், அதாவது குர்ஆனி) -னிடத்தும் நம்பிக்கை கொள்ளுங்கள். (அத்தகாபுன் 64:9)

### மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்ளுதல்

الَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِالْغَيْبِ وَ يُقِيْمُوْنَ

அவர்கள் மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வர் (அல் பகரா 2:4)

### நபிமார்கள் மற்றும் தூதர்கள் மீது நம்பிக்கை கொள்ளுதல்

وَلٰكِنَّ الْبِرَّ مَنْ اٰمَنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ وَالْمَلٰۤٮِٕكَةِ وَالْكِتٰبِ وَالنَّبِيّٖنَ ۚ

ஆயினும் அல்லாஹ்விடத்தும், இறுதி நாளிடத்தும், வானவர்களிடத்தும், இறைவேதத்திடத்தும், எல்லா நபிமார்களிடத்தும் எவர் நம்பிக்கை கொள்கிறாரோ அதுவே நன்மையாகும். (அல் பகரா 2:178)

### தூதர்களுக்கு உதவி செய்யுங்கள்

وَاٰمَنْتُمْ بِرُسُلِىْ وَعَزَّرْتُمُوْهُمْ

எனது தூதர்களிடத்து நம்பிக்கைக் கொண்டு, அவர்களுக்கு ஆதரவு கொடுங்கள். (அல் மாயிதா 5:13)

(தொடரும்...)

# காதியானும் அதன் புனித, வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும்

**தொகுப்பு: மவ்லானா முஹம்மது ஹமீது கவ்ஸர்**
(அஹ்மதிய்யத் வரலாற்றுத் துறையின் பொறுப்பாளர், காதியான்)

4

தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.

## பைத்துல் ஃபிக்ர்

பைத்துல் ஃபிக்ர் என்பது முபாரக் மஸ்ஜிதுடன் ஒட்டியதாக வடக்குப் பகுதியில் அமைந்துள்ள அறை ஆகும். மேலும் இந்த அறையின் ஜன்னல் முபாரக் மஸ்ஜிதின் பழைய பகுதியில் திறக்கிறது. இந்த அறையின் அகலம் ஏறக்குறைய 10 அடியும், நீளம் 13 அடி 6 அங்குலமுமாக இருக்கிறது. இந்த அறையில் நுழைவதற்கு முபாரக் மஸ்ஜிதின் ஜன்னல் மட்டுமின்றி ஒரு கதவு கிழக்குப் பகுதியிலும், இன்னொரு கதவு வடக்குப் பகுதியிலும் இருக்கிறது. இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் துவக்க நாட்களில் நூல்களை இயற்றும் பணிகளில் ஈடுபட்டிருந்த அந்த அருளுக்குரிய அறையாகும். இந்த அறையைப் பற்றித்தான் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு 1882-ஆம் ஆண்டு, اَلَمْ نَجْعَلْ لَّكَ سُهُوْلَةً فِىْ كُلِّ اَمْرٍ۔ بَيْتُ الْفِكْرِ۔ (அலம் நஜ்அல் லக சுஹூலதன் ஃபீ குல்லி அம்ரின் - பைத்துல் ஃபிக்ர்........) அதாவது, நாம் ஒவ்வொரு விஷயத்திலும் உமக்கு எளிதானதை உருவாக்கித் தரவில்லையா? நாம் உமக்கு பைத்துல் ஃபிக்ரை வழங்கியிருக்கிறோமே! என்று இல்ஹாம் இறங்கியது. (தஸ்கிரா பக்கம் 82 காண்க).

இந்த அறை துஆக்கள், நஃபிலான வணக்கங்கள் ஆகியவை செய்வதற்காக எல்லா நேரமும் திறந்திருக்கிறது. நஃபிலான வணக்கங்கள் செய்வதற்கான நேரம் இல்லா விட்டாலும் கையை உயர்த்தி சுன்னத்தான முறையில் துஆக்களை செய்யலாம்.

பைத்துல் ஃபிக்ர்-ன் வடக்கு திசையில் கொஞ்சம் பெரிய அறை இருக்கிறது. அதன் நீளம் ஏறக்குறைய இருபத்து மூன்று (23) அடியும், அகலம் பன்னிரெண்டு (12) அடியும் கொண்டதாகும். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் இந்த அறையைப் பற்றி கூறியதாவது, பைத்துத் துஆவுடன் இருக்கும் வடக்கு திசையிலுள்ள தாலானும் (முற்றமும்) மிகவும் வரலாற்றுச் சிறப்பு கொண்டதும், புனிதமானதும் ஆகும். இதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது இறுதி காலத்தைக் கழித்தார்கள். மேலும் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் பின்னர் இங்கேயே இருந்தார்கள். இங்கு பல இல்ஹாம்கள் இறங்கின. இன்னும் கூறுவதாயின், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் (தாலான் - முற்றம் ஆகிய) இதை பைத்துல் ஃபிக்ர்-ஐ சேர்ந்ததாகக் கூறி வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இதை பைத்துல் ஃபிக்ர்-ன் பகுதியுடன் சேர்ந்ததாகக் குறிப்பிட்டு வந்தார்கள். (அஸ்ஹாபே அஹ்மது நூலின் இணைப்பு தொகுதி 1 பக்கம் 21)

இந்த அறையும் துஆக்கள் மற்றும் நஃபில்கள் தொழுவதற்காக திறந்திருக்கின்றன.

## பைத்துத் துஆ

ஹஸ்ரத் யஃகூப் அலி சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:

“துஆக்கள் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் இருந்த ஒரு சிறப்புத்தன்மை என்னவெனில், ஹுஸூர் (அலை) அவர்கள் பயணத்தில் இருந்த நிலையிலும், பயணத்தில் இல்லாத நிலையிலும் துஆவுக்காக ஒரு தனிப்பட்ட இடத்தை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். மேலும் அது ‘பைத்துத் துஆ’ என்று அழைக்கப்பட்டு வந்தது. நான் ஹுஸூர் (அலை) அவர்களுடன் எங்கெல்லாம் சென்றேனோ, அவர்கள் துஆவுக்காக ஒரு தனி இடத்தைக் கண்டிப்பாக உருவாக்கியதை நான் கண்டிருக்கிறேன். மேலும் ஹுஸூர் (அலை) அவர்கள் துஆவுக்காக ஒரு தனி இடத்தைக் கண்டிப்பாக உருவாக்கிக் கொண்டார்கள். மேலும் அவர்கள் தமது அன்றாட நிகழ்வில் ஒரு நேரத்தை துஆவுக்காக தனித்து வைத்து விடுவதை எப்போதும் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். காதியானில் துவக்க காலத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள், தமக்குத் தங்குவதற்காக குறிப்பாக ஒதுக்கப்பட்டிருந்த தமது அந்த அறையிலேயே துஆக்களில் ஈடுபட்டு வந்தார்கள். அது அவர்களுக்காக தனிப்பட்ட இடமாக இருந்தது.


Dalaan Hazrat Amma-Jan", Qadian

பின்னர் பைத்துஸ் ஸிக்ர் (எனும் முபாரக் மஸ்ஜிது) இந்தக் குறிக்கோளுக்காக தனிப்பட்டதாக ஆகி விட்டது. அல்லாஹ்வின் நிரந்தரமான விருப்பம், பைத்துஸ் ஸிக்ரையும் (அதாவது முபாரக் மஸ்ஜிதையும்) பொதுவான இறை வணக்கம் செய்யும் இடமாக ஆக்கி விட்டபோது ஹுஸூர் (அலை) அவர்களுக்குத் தனிமை கிடைக்க முடியாமற்போய் விட்டது. அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள் தமது வீட்டில் ஒரு பைத்துத் துஆவை (துஆ செய்யும் இல்லத்தை) உருவாக்கினார்கள். அது இப்போது வரை இருக்கிறது.

பூகம்பம் ஏற்பட்டபோது ஹுஸூர் (அலை) அவர்கள் கொஞ்ச காலத்திற்காக தோட்டத்திற்குச் சென்று விட்டார்கள். அப்போது அங்கும் (தனித்திருந்து துஆ செய்யும்) இந்த குறிக்கோளுக்காக ஓர் அறையைக் கட்ட ஏற்பாடு செய்தார்கள். குர்தாஸ்பூர் வழக்குகள் தொடர்பாக ஹுஸூர் (அலை) அவர்களுக்கு கொஞ்ச காலம் தங்க வேண்டியது ஏற்பட்டபோது அங்கும் பைத்துத் துஆவிற்கான (துஆ செய்யும் இல்லத்திற்கான) ஏற்பாடு இருந்தது. (சீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது அலைஹிஸ் ஸலாம் தொகுதி 5 பக்கம் 505)

மேற்கூறப்பட்ட பைத்துத் துஆவில் (அதாவது துஆக்கள் செய்யும் இல்லங்களில்) 'பைத்துத் துஆ' என்பது ஹுஸூர் (அலை) அவர்கள் தமது மரணத்திற்கு ஏறக்குறைய ஐந்து ஆண்டுகள் இரண்டரை மாதங்களுக்கு முன்பு அடிக்கல் நாட்டியிருந்த அந்த அறையும் ஆகும். ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் தாலானுக்கு (முற்றத்திற்கு) மேற்குப் பக்கம் ஒரு சிறிய அறை இருக்கிறது. அதன் நீளம் 6 அடி 6 அங்குலமும் அகலம் 4 அடியும் ஆகும். அதற்கு கிழக்குப் பக்கமும், மேற்குப் பக்கமும் இரண்டு கதவுகள் இருக்கின்றன. மேலும் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் தாலான் (முற்றம்) வழியாக இதில் நுழைவதற்காக மரத்தால் உருவாக்கப்பட்ட ஓர் ஏணியின் மூலமாக மேலே ஏற வேண்டியதிருக்கிறது.




ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த 'பைத்துத் துஆ'-வைக் (துஆவுக்கான அறையைக்) கட்டும் குறிக்கோளைப் பற்றி கீழ்வரும் சொற்களில் எழுதுகிறார்கள்:

"நான் சிந்தித்ததாவது, ஆயுளைப் பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. (எனது) ஆயுளில் எழுபது ஆண்டுகள் கழிந்து விட்டன. மரணத்திற்கான நேரம் பற்றி எதுவும் கணிப்பதற்கில்லை; அது எப்போது வரும் என்பதை இறைவனே நன்கறிவான். மேலும் நமது பணிகள் இன்னும் எவ்வளவோ எஞ்சியிருக்கின்றன. இன்னொரு பக்கம் எழுதுகோலின் ஆற்றல் பலவீனமடைந்து கொண்டிருக்கின்றது.

(அதாவது எழுதுவதற்கான ஆற்றலும் குறைந்து கொண்டிருக்கிறது - மொழிபெயர்ப்பாளர்).

வாளைப் பொருத்தவரை இறைவனின் கட்டளையோ, விருப்பமோ இல்லை. எனவே நாம் வானத்தை நோக்கி கையேந்தினோம். மேலும் அவனிடமிருந்தே ஆற்றலைப் பெறுவதற்காக ஒரு தனி அறையை உருவாக்கினோம். மேலும் இந்த மஸ்ஜிதுல் பைத்தையும், பைத்துத் துஆவையும் அமைதிக்குரியதும், சமாதானத்திற்குரியதுமான இல்லமாகவும், ஒளிமிக்க சான்றுகளின் மூலமாகவும், மிளிர்கின்ற ஆதாரங்களின் மூலமாகவும் எதிரிகளை வெற்றி கொள்ளும் இல்லமாகவும் நீ ஆக்குவாயாக என்று நாம் இறைவனிடம் துஆ செய்தோம்." (ஹஸ்ரத் மு.ஃப்தி முஹம்மது சாதிக் சாஹிப் ரழியல்லாஹு அன்ஹு எழுதிய ஸிக்ரே ஹபீப் என்ற நூல் பக்கம் 109-110)

நாம் பைத்துத் துஆவில் துஆ செய்யும் நேரத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதை கட்டும்போது குறிப்பிட்டிருந்த அந்தக் குறிக்கோளை நாம் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். முதன் முதலில், இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் வெற்றிக்காக வேதனையுடன் கூடிய உள்ளத்துடனும், மன்றாடுதலுடனும் துஆக்கள் செய்ய வேண்டும். குறிப்பாக, அல்லாஹ்வே! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த அறையில் எத்தனை துஆக்கள் செய்துள்ளார்களோ அவற்றை நீ ஏற்றுக் கொண்டவாறு அதன் கனிகளை ஜமாஅத்திற்கும், முழு உலகிலுள்ள மக்களுக்கும் அருள் புரிந்து கொண்டே செல்வாயாக என்றும், ஹஸ்ரத் கலீ.ஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா அவர்களுக்கு உடல் நலத்தையும், நீண்ட ஆயுளையும், அவர்களின் அனைத்து குறிக்கோள்களில் வெற்றியையும் வழங்குவாயாக என்றும் துஆக்கள் செய்ய வேண்டும். இந்த துஆக்களுக்குப் பிறகு நீங்கள் உங்களின் சொந்த குறிக்கோள்களுக்காகவும் துஆக்களை செய்யுங்கள்.

மேலே நூலாசிரியர் குறிப்பிட்டதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான சில விஷயங்கள் இருக்கின்றன. அதாவது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த பைத்துத் துஆவை உருவாக்கியதன் குறிக்கோளாக மூன்று விஷயங்களைக் கூறுகிறார்கள்:

1) தப்லீக் பணிக்காக இறைவனிடமிருந்து தமக்கு ஆற்றல் கிடைக்க வேண்டும். 2) அமைதி, சமாதானம் ஏற்பட வேண்டும். 3) ஒளிமிக்க சான்றுகளின் மூலமாகவும், மிளிர்கின்ற ஆதாரங்களின் மூலமாகவும் எதிரிகளை வெற்றி கொள்ள வேண்டும்.

இவற்றிக்காகத்தான் நான் இந்த பைத்துத் துஆவை உருவாக்கி இருக்கிறேன் என்று கூறுகிறார்கள். நாம் இந்த பைத்துத் துஆவில் நமது எல்லாத் தேவைகளுக்காகவும் துஆ செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறோம். அதில் எந்தத் தவறுமில்லை; ஆயினும் எந்த மூன்று குறிக்கோளுக்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பைத்துத் துஆவை உருவாக்கினார்களோ அவை நிறைவேறு -வதற்காக துஆ செய்வது நமது முதன்மையான கடமையாகும். இதை நாம் அனைவரும் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் - மொழிபெயர்ப்பாளர்.

## அவசியமான தெளிவுரை

ஜல்ஸா சாலானா நாட்களில் மதிப்பிற்குரிய சில விருந்தினர்கள் பைத்துத் துஆவில் துஆ செய்வதற்காக மட்டுமே எதிர்பார்த்தவாறு மிக நீண்ட வரிசைகளில் மிக அதிகமான நேரங்களை எதிர்பார்த்தவாறு கழித்து விடுவதைப் பார்க்க முடிகிறது. மேலும் காதியானில் இது ஒன்று மட்டுமே துஆக்கள் கபூல் ஆகும் புனிதமான இடம் என்று கருதுகின்றனர். ஆனால் இந்த சிந்தனை சரியன்று.


அப்படிக் கருதும் சகோதரரர்களுக்கு தெரிவிப்பதற்காக குறிப்பிடுவது என்னவெனில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 1903-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13-ஆம் தேதி அன்றுதான் பைத்துத் துஆவுக்கான அடிக்கல் நாட்டினார்கள். மேலும் ஹுஸூர் (அலை) அவர்கள் 1908-ஆம் ஆண்டு மே மாதம் 26-ஆம் தேதியன்று மரணமடைந்தார்கள். இந்த வகையில் ஏறக்குறைய 5 ஆண்டுகள் மட்டுமே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் (பைத்துத் துஆ எனும்) இந்த அறையில் துஆ செய்தார்கள். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 1876-ஆம் ஆண்டிலிருந்து அவர்களின் இறப்பு வரை ஏறக்குறைய 32 ஆண்டுகள் அக்ஸா மஸ்ஜிதில் துஆ செய்து வந்தார்கள். மேலும் அக்ஸா மஸ்ஜிது பற்றி ஹுஸூர் (அலை) அவர்களின் ஏராளமான இல்ஹாம்களும், எழுத்துகளும் இருக்கின்றன. அவை இந்த நூலில் அக்ஸா மஸ்ஜிது பற்றிய தலைப்பில் பின்னர் எழுதப்பட்டுள்ளன. முபாரக் மஸ்ஜிதில் 1883-ஆம் ஆண்டிலிருந்து இறப்பு வரை 25 ஆண்டுகள் துஆக்களை செய்து வந்தார்கள். மேலும் இந்த முபாரக் மஸ்ஜிது பற்றி ஏராளமான இல்ஹாம்களும் இருக்கின்றன. எனவே (அக்ஸா மஸ்ஜிது, முபாரக் மஸ்ஜிது ஆகிய) இந்த மஸ்ஜிதுகளில் அதிகமதிகமாக துஆக்கள் செய்ய வேண்டும்.

## பைத்துர் ரியாஸத்

### (இறை தியானத்தில் ஈடுபட்டிருந்த அறை)

சயியிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 1875-ஆம் ஆண்டின் இறுதியில் அல்லது 1876-ஆம் ஆண்டின் துவக்கத்தில் தூய்மையான உருவத்திலுள்ள வயது முதிர்ந்த ஒரு பெரியவரைக் கனவில் கண்டார்கள். அந்தப் பெரியவர் ஹுஸூர் (அலை) அவர்களிடம், 'வானத்தின் ஒளிகளுக்கான முன்னறிவிப்பைப் பெறுவதற்காக ஓரளவுக்கு நோன்பு வைப்பது நுபுவ்வத்தினுடைய குடும்பத்தின் நடைமுறையாகும்' என்று கூறினார். ஹுஸூர் (அலை) அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குடும்பத்தாரின் நடைமுறையை கடைபிடிக்குமாறு அ(ந்தப் பெரிய)வர் சுட்டிக் காட்டினார். அதன்படி, ஹுஸூர் (அலை) அவர்கள் எட்டு அல்லது ஒன்பது மாதங்கள் வரை மறைமுகமாக நோன்பு வைப்பதற்குக் கடும் முயற்சி செய்தார்கள். அது குறித்து ஹுஸூர் (அலை) அவர்கள் கீழ்வரும் சொற்களில் கூறி இருக்கிறார்கள்:

"எனவே நான் கொஞ்ச காலகட்டம் வரை தொடர்ந்து நோன்பு வைப்பதை பொருத்தமானதாகக் கருதினேன். ஆயினும், அத்துடன் இதை நான் மறைமுகமாக நிறைவேற்றுவதை சிறந்ததாகக் கருதினேன். எனவே நான் மேற்கொண்ட முறை என்னவெனில், வீட்டில் ஆண்கள் அமர்ந்திருக்கும் இடத்தில் எனக்கான உணவைக் கேட்டு வாங்கி, பின்னர் அந்த உணவை, நான் எந்த சில அநாதைக் குழந்தைகளை முன்னரே வருவதற்காக திட்டமிட்டு குறித்த நேரத்தில் வருமாறு வலியுறுத்திக் கூறி வைத்திருந்தேனோ அவர்களுக்குக் கொடுத்து வந்தேன். மேலும் இவ்வாறு நான் நாள் முழுக்க நோன்பில் கழித்தேன். மேலும் இறைவனைத் தவிர வேறு யாருக்கும் அந்த நோன்புகளைப் பற்றி தெரியாதிருந்தது. பின்னர் இரண்டு, மூன்று வாரங்களுக்குப் பிறகு, ஒரு வேளைக்கு வயிறு நிரம்ப உணவை சாப்பிட்டு வந்த எனக்கு கொஞ்சமும் துன்பம் ஏற்பட்டதில்லை என்பது எனக்குத் தெரிந்தது. நான் ஓரளவுக்கு உணவைக் குறைத்து விடுவது சிறந்ததாக இருந்தது. எனவே நான் அந்த நாளிலிருந்து உணவைக் குறைத்துக் கொண்டே சென்றேன். எதுவரையெனில், நான் இரவு பகல் முழுவதும் வெறும் ஒரு ரொட்டியை போதுமானதாக ஆக்கிக் கொண்டேன்.


பைத்துர் ரியாஸத் (மேல் மாடி)


தாருல் மஸீஹ், காதியான்

எதுவரையெனில் 24 மணி நேரத்திற்குப் பிறகு 12 கிராம் எடையுள்ள சில ரொட்டிகள் எனது உணவாக இருந்தது. அநேகமாக எட்டு அல்லது ஒன்பது மாதங்கள் வரை நான் அவ்வாறே செய்தேன். இரண்டு மூன்று மாதக் குழந்தை கூட பொறுமை செய்து கொள்ள முடியாத அந்த அளவுக்குக் குறைவாக உணவு இருந்தும் அல்லாஹ் என்னை எல்லா சோதனையிலிருந்தும், துன்பத்திலிருந்தும் பாதுகாத்தான். மேலும் இந்த வகையான நோன்பின் அற்புதங்களிலிருந்து எனது அனுபவத்தில் வந்தவை என்பது இக்காலத்தில் எனக்கு வெளிப்பட்ட நுட்பமான கஷ்ஃபு (ஆன்மீகக்) காட்சிகள் ஆகும். அதன்படி, முந்தைய நபிமார்களுடன் சந்திப்புகள் ஏற்பட்டன. மேலும் இந்த உம்மத்தில் தோன்றி மறைந்த மிக உயர்தரமான வலிமார்கள் (இறை நேசர்கள்) ஆகியோருடன் சந்திப்பு ஏற்பட்டது.

ஒருமுறை விழித்திருக்கும் நிலையிலேயே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் ஹசன் (ரலி), ஹுசைன் (ரலி), அலீ (ரலி), ஃபாத்திமா (ரழியல்லாஹு அன்ஹா) ஆகியோரைக் கண்டேன். மேலும் இது கனவாக இருக்க -வில்லை. மாறாக, விழிப்புடன் இருந்த (கஷ்ஃப்) வகையைச் சேர்ந்ததாக இருந்தது. சுருக்கமாக, இவ்வாறே பல்வேறுபட்ட தூயவர்களைச் சந்திக்க நேர்ந்தது. அவற்றைக் குறிப்பிடுவது நீட்சிக்குக் காரணமாகும். இது மட்டுமின்றி, ஆன்மீக ஒளிகள் உருவகமான முறையில் பச்சை நிறம், சிவந்த நிறம் கொண்ட தூண்களாக எத்தகைய அளவுக்கு உள்ளத்தை ஈர்க்கக் கூடியவையாகவும், உள்ளத்தை கொள்ளை கொள்ளக் கூடியவையாகவும் தென்பட்டனவென்றால், அவற்றைக் குறிப்பிடுவது எழுத்தில் வடிவமைக்கும் ஆற்றலுக்கு முற்றிலும் அப்பாற்பட்டது ஆகும். நேராக வானத்தை நோக்கி சென்றிருந்த அந்த ஒளிமிக்க தூண்களில் சில ஒளிர்கின்ற வெண்மையாகவும், சில பச்சையாகவும், சில சிவப்பாகவும் இருந்தன. (ஒளிமிக்க தூண்களாகிய) அவற்றிற்கு உள்ளத்துடன் எப்படிப்பட்ட தொடர்பு இருந்தது என்றால், அவற்றைப் பார்த்து உள்ளத்திற்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருந்தது. மேலும் அவற்றைப் பார்த்து உள்ளத்திற்கும், ஆன்மாவுக்கும் எத்தகைய இன்பம் கிடைத்துக் கொண்டிருந்ததோ அந்த அளவுக்கு உலகில் வேறு எந்த இன்பமும் இருக்காது. என்னைப் பொருத்தவரை, அந்தத் தூண் இறைவனுக்கும் அடியாருக்கும் இடையிலான அன்பு எனும் பிணைப்பால் ஓர் உருவகமான நிலையில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதாவது அது உள்ளத்தில் இருந்து வெளியான ஓர் ஒளியாக இருந்தது. இன்னொன்று மேலே இருந்து இறங்கிய ஒளியாக இருந்தது. மேலும் அவை இரண்டும் இணைவதால் ஒரு தூண் என்ற வடிவம் உருவாகி விட்டது. இவை ஆன்மீக விஷயங்களாகும். அவற்றை உலகம் அடையாளம் கண்டு கொள்ள முடியாது. ஏனெனில், அவை உலகின் கண்களை விட்டு மிகவும் தொலைவில் இருக்கின்றன. ஆயினும் இவ்வுலகில் அந்த விஷயங்களைப் பற்றிய செய்தி கிடைப்பவர்களும் இருக்கின்றனர். (கிதாபுல் பரிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 13 பக்கம் 197-199. காதியான் பதிப்பு 2008)

ஹுஸூர் (அலை) அவர்கள் எட்டு அல்லது ஒன்பது மாதங்கள் நோன்பு இருந்த அந்த அறை ‘பைத்துர் ரியாஸத்’ (இறை தியானத்தில் தொடர்ந்து ஈடுபட்டிருந்த அறை) என்று அழைக்கப்படுகிறது. இந்த அறையில்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பராஹீனே அஹ்மதிய்யா நூலை இயற்றினார்கள். (சீரத்துல் மஹ்தி தொகுதி 2 பக்கம் 151. ரிவாயத் எண்: 1206 காதியான் பதிப்பு 2008-ஆம் ஆண்டு)

இந்த அறை நஃபில் தொழுவதற்காகவும், துஆக்களுக் -காகவும் திறந்திருக்கிறது.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பிறந்த அறை

சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சொந்த வீடாகிய اَلدَّار (அத்தார்) என்பதிலுள்ள ஓர் அறையில் ஹுஸூர் (அலை) அவர்கள் ஹிஜ்ரி 1250-ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் 14-ஆம் நாள் அதாவது கி.பி. 1835-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிறந்தார்கள்.

### ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பிறந்த அறை

“ اَلدَّار (அத்தார்) எனும் இதன் எல்லைக்குள்ளேயே இருக்கும் இன்னோர் அறையில் சய்யிதுனா ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் 1889-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ஆம் தேதி பிறந்தார்கள். கமருல் அன்பியா ஆகிய ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

“உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் அம்மா ஜான் (اَطَالَ اللّٰهُ ظِلَّهَا) அதாலல்லாஹு ழில்லஹா - அல்லாஹ் அவர்களின் நிழலை நீண்டதாக்குவானாக) அவர்கள் என்னிடம் கூறினார்கள்: எனக்கு குழந்தைகள் பிறந்தது எப்படி என்றால், இஸ்மத் அம்பாலாவில் பிறந்தாள். பஷீரே அவ்வல் காதியானில் பைத்துல் ஃபிக்ர் என்ற அறையுடன் ஒட்டிய முற்றமாக இருக்கும் இடத்தில் பிறந்தான். உனது சகோதரர் மஹ்மூது வட்ட வடிவைக் கொண்ட அறையுடன் ஒட்டியுள்ள கீழே உள்ள முற்றத்தில் பிறந்தான். ஷவ்கத் லூதியானாவில்

பிறந்தாள். நீ (அதாவது எளியவன் மிர்ஸா பஷீருத்தீன் அஹ்மது) கீழே முற்றத்தை ஒட்டிய வட்ட வடிவைக் கொண்ட அறையில் பிறந்தாய். ஷரீஃப் அஹ்மதும் இந்த முற்றத்திலேயே பிறந்தான். மேலும் முபாரகாவும் இதிலேயே பிறந்தாள். முபாரக் மேற்கு தெருவுடன் இணைந்திருக்-கின்றதும், கிணற்றுக்கு மேற்குப் புறத்தில் இருக்கின்றது-மாகிய அந்த கீழ்தளத்தின் முற்றத்தில் பிறந்தான். அமதுன் நஸீர் முபாரக்கின் முற்றத்தில் பிறந்தாள். மேலும் அமதுல் ஹஃபீஸ் பைத்துல் ஃபிக்ருடன் சேர்ந்திருக்கும் மேலே உள்ள அறையில் பிறந்தாள்.” (சீரத்துல் மஹ்தி தொகுதி 2 பக்கம் 182. ரிவாயத் எண்: 1275 காதியான் பதிப்பு 2008-ஆம் ஆண்டு)

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க, அருளுக்குரிய அறைகளின் நீளம் கிழக்கிலிருந்து மேற்கு வரை 19 அடியும், 10 அங்குலமும், அகலம் வடக்கிலிருந்து தெற்கு வரை 9 அடியும், 10 அங்குலமும் ஆகும். இந்த அறை நஃபில்களுக்கும், ஸியாரத் செய்வதற்கும் திறந்திருக்கிறது.

கமருல் அன்பியா ஆகிய ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

“உம்முல் முஃமினீன் நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் என்னிடம் இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது அனைத்து வீடுகளுக்கும் பைத்துல் பரகாத் (அருள்களின் இல்லம்) என்று பெயர் வைத்திருந்தார்கள். பின்னர் மியான் ஷரீஃப் இருந்து வருகின்றதும், இன்றைய காலத்தில் உம்மே தாஹிர் அஹ்மது (அதாவது தாஹிர் அவர்களின் தாயார்) இருக்கின்றதுமாகிய அந்த வீடு உருவான போது அதன் ஒரு பகுதி தெருவின் பக்கமிருந்து பகிரங்கமாக தென்பட்டிருந்ததால் ஹுஸூர் (அலை) அவர்கள் அதன் அந்த பகுதியில் ‘பைத்துல் பரகாத்’ என்ற சொற்களை எழுத வைத்தார்கள். அதனால் சிலர் ஒருவேளை இந்தப் பெயர் அந்தப் பகுதிக்குரியதே ஆகும் எனத் தவறுதலாகக் கருதிக் கொண்டனர். ஆனால் ஹுஸூர் (அலை) அவர்கள் தமது முழு வீட்டிற்கும் ‘பைத்துல் பரகாத்’ என்று பெயர் வைத்திருந்தார்கள்.

அது மட்டுமின்றி, ஹுஸூர் (அலை) அவர்கள் தமது வீட்டின் சில பகுதிகளுக்கு சிறப்பான பெயர்களையும் வைத்திருந்தார்கள். எடுத்துக்காட்டாக, முபாரக் மஸ்ஜிதுக்கு பக்கத்திலிருக்கும் (அதாவது முபாரக் மஸ்ஜிதுக்கு அடுத்து வலப் பக்கம் இருக்கும்) அறைக்கு ‘பைத்துல் ஃபிக்ர்’ என்று பெயர் வைத்திருந்தார்கள். இன்னும் கூறுவதென்றால், உண்மையில் (பைத்துல் ஃபிக்ர் எனும்) இந்தப் பெயரில் அதற்கு அடுத்து இருக்கும் ‘தாலான்’ (முற்றம்) என்பதும் அடங்கும். அவ்வாறே இப்போது முன் வாயிலுடன் இணைந்திருக்கும் கீழே உள்ள ஓர் அறைக்கு ‘பைத்துன் நூர்’ என்று ஹுஸூர் (அலை) அவர்கள் பெயர் வைத்திருந்தார்கள். மேலும் ஒரு காலத்தில் மவ்லவி முஹம்மது அலீ சாஹிப் இருந்து வந்த மூன்றாவது தளத்தின் தாலான் (முற்றம்) - அதில் இப்போது உம்மே வஸீம் அஹ்மது (வஸீம் அஹ்மதின் தாயார்) இருக்கின்றார்கள். அதற்கு ‘பைத்துஸ் ஸலாம்’ என்று ஹுஸூர் (அலை) அவர்கள் பெயர் வைத்திருந்தார்கள்....... தற்போது வீட்டின் எந்த மேல் அறையில் குழந்தையைப் பராமரிக்கும் காகூ எனும் பணிப்பெண் இருக்கின்றாரோ, அந்த




அறை மிர்ஸா சுல்தான் அஹ்மது சாஹிப் அவர்களின் வீட்டுக்கு அருகில் இருக்கின்றது. மேலும் அது எனது (அதாவது மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களின்) தற்போதைய சமையல் அறைக்கு அருகில் இருக்கிறது. இதில் ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ள அந்த நீண்ட நோன்புகளை வைத்தார்கள். மேலும் இந்த அறையில்தான் ஹஸ்ரத் சாஹிப் (அலை) பராஹீனே அஹ்மதிய்யா நூலை எழுதினார்கள். (சீரத்துல் மஹ்தி தொகுதி 2 பக்கம் 150 ரிவாயத் எண்: 1206 காதியான் பதிப்பு 2008-ஆம் ஆண்டு)

(தொடரும்...)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பைத்துத் துஆவை உருவாக்கியதன் குறிக்கோளாக மூன்று விஷயங்களைக் கூறுகிறார்கள்:**

1) **தப்லீக் பணிக்காக இறைவனிடமிருந்து தமக்கு ஆற்றல் கிடைக்க வேண்டும்.**
2) **அமைதி, சமாதானம் ஏற்பட வேண்டும்.**
3) **ஒளிமிக்க சான்றுகளின் மூலமாகவும், மிளிர்கின்ற ஆதாரங்களின் மூலமாகவும் எதிரிகளை வெற்றி கொள்ள வேண்டும்.**



# நெருப்பு தின்னும் குர்பானி

108 யானைகளுடன் கோவையில் ஒரு யாகம் நடந்தது. இதற்கு அரச மரம், ஆல மரம், அத்தி மரம், சந்தன மரம், மகிழ மரம் ஆகியவை 110 டன் அளவுக்கு வெட்டப்பட்டன. யாகத்தீயில் 100 மூட்டை அரிசி, 100 மூட்டை நெல், 2000 லிட்டர் பால், 2000 லிட்டர் தயிர், 1000 கிலோ நெய், 1000 கிலோ எண்ணெய், ஆப்பிள், மாம்பழம், கொய்யா ஆகிய பழங்கள் 20,000 கொட்டப்பட்டன. திராவிட கழகத்தினர் இதனைக் கண்டித்து 108 கழுதைகளுடன் ஊர்வலம் நடத்தினர்.

(ஆதாரம்: ராணி 29.03.1987)

கோவையில் நடந்த யாகத்திற்கு எவ்வளவு செலவு தெரியுமா? அதனைக் கணக்கிட ஒரு குறிப்பு தருகிறேன். ஒரு மரத்தின் மதிப்பு: ஒரு மரம் வெளியிடும் பிராண வாயுவின் மதிப்பு, மரத்தால் கிடைக்கும் மழையின் மதிப்பு, காற்றிலுள்ள அசுத்தத்தை அது சுத்தி செய்வதன் மதிப்பு, மண் அரிப்பைத் தடுப்பதால் ஏற்படும் விளைவின் மதிப்பு, பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் அது தரும் பாதுகாப்பின் மதிப்பு என்று கணக்கிட்டால் ஒரு மரத்தின் மதிப்பு ஏறக்குறைய ஒன்றே முக்கால் இலட்ச ரூபாய் ஆகும்.

(ஆதாரம்: முத்தாரம் 5.2.98 பக்கம் 24)

ஒருவேளை உணவு கூட கிடைக்காத ஏழைகள் எத்தனை ஆயிரம் பேருக்கு அவற்றைக் கொடுக்கலாம்? என எண்ணியே தி.க.-வினர் கழுதை ஊர்வலம் நடத்தினர் போலும்!

110 டன் அளவுக்கு மரங்கள் வெட்டப்பட்டு வேள்வித்தீயில் எரிக்கப்பட்டுள்ளது. மரம் என்றால், எத்தனையோ அழகுகளை அரவணைக்கிறது. அதன் கிளைகள் குரங்குகளுக்கும் குழந்தைகளுக்கும் ஊஞ்சல், பறவைகளுக்குக் கட்டில், பயணிகளுக்குப் பாதுகை, வண்டுகளுக்கு வாசக சாலை, தேனீக்களுக்கு உறைவிடம் என்று பலவற்றைத் தன் மடியில் தங்க வைத்து தாலாட்டுகிறது. அதன் வேரும், பட்டையும், இலையும், காயும், கனியும் மருத்துவ குணம் கொண்டவை.

மேலே சுட்டிக் காட்டிய இரு தரப்பினரும் பிரெஞ்சு எழுத்தாளர் வால்டேர் கூறுவதை நினைவில் கொள்ள வேண்டும். “நீ சொல்வதை நான் மறுக்கிறேன். ஆனால் அதைச் சொல்ல உனக்குள்ள உரிமையை என் உயிரை கொடுத்தும் பாதுகாப்பேன்.”

“நெருப்பு தின்று விடும் தியாகம் ஒன்றைக் கொண்டு வராதவரை எத்தூதரையும் ஏற்கக் கூடாதென அல்லாஹ் நிச்சயமாக எங்களுக்குக் கட்டளை இட்டுள்ளான் என்று அவர்கள் கூறினர். நீர் (அவர்களிடம்) கூறுவீராக: எனக்கு முன் உங்களிடத்து பல தூதர்கள் தெளிவான அடையாளங்களையும் நீங்கள் கூறியதையும் கொண்டு வந்துள்ளனர். பின்னர் நீங்கள் உண்மை -யாளர்கள் எனின் அவர்களை ஏன் கொலை செய்ய முயன்றீர்கள்?” (திருக்குர்ஆன் 3:184)

இதன் பொருள் எங்கிருந்தோ நெருப்பு வந்து அதைச் சாம்பலாக்கி விடும் என்பதன்று. மாறாக, நெருப்பில் எரிக்கப்படுகின்ற தியாகம் என்றே இதன் பொருள். இதற்கு வேள்வி (யாகம்) என்று கூறப்படும். இத்தியாக முறை இந்துக்களிடத்தும், ஈரானியரிடத்தும், யூதரிடத்தும் பெரு வழக்கமாக இருந்தது.

(இது பற்றிய விளக்கத்துக்கு பைபிள் பழைய ஏற்பாடு உபாகமம் 33/10 மற்றும் I ராஜாக்கள் 18:30-40 காண்க.)

A.P.Y. அப்துல் காதிர்

# யார் நல்ல மனிதர்?

**(ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் 'மின்ஹாஜுத் தாலிபீன்' என்ற நூலிலிருந்து)**

**தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது**

இப்போது முக்கியமான கேள்விக்கு வருகிறேன்: ஒரு நல்ல மனிதனின் வரையறை என்ன? ஒரு மனிதன் எல்லா நற்பண்புகளையும் பெற்றிருக்க வேண்டும். எல்லாத் தீமைகளிலிருந்தும் எல்லாக் குறைபாடுகளில் இருந்தும் விடுபட்டிருக்க வேண்டும். அப்போதுதான் ஒருவர் நல்ல மனிதர் என்று அழைக்கப்பட முடியும் என்பது கிறிஸ்தவ மார்க்கத்தின் கருத்தாகும். மற்ற மார்க்கங்களும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இதே கருத்தையே கொண்டுள்ளன. ஆனால் திருக்குர்ஆன் வெளிப்படையாகக் கூறுகிறது:

فَأَمَّا مَنْ ثَقُلَتْ مَوَازِينُهُ ۙ فَهُوَ فِي عِيشَةٍ رَّاضِيَةٍ ۗ وَأَمَّا مَنْ خَفَّتْ مَوَازِينُهُ ۙ فَأُمُّهُ هَاوِيَةٌ ۗ

பின்னர் எவரது (செயல்களின்) எடைகள் கனமானவையாக உள்ளனவோ, அவர் திருப்திகரமான வாழ்வைப் பெறுவார். ஆனால் எவரது (செயல்களின்) எடைகள் குறைந்தவையாக உள்ளனவோ நரகம் அவருக்குத் (தாயாகி) தங்குமிடமாகி விடும். (101:7-10)




உதாரணமாக, ஒரு தேர்வாளர் ஒன்பது கேள்விகளுக்குச் சரியாகப் பதிலளித்தாலும், பத்தாவது கேள்விக்கான பதில் சரியாக இல்லாவிட்டால், அதற்காக அவர் தண்டிக்கப்பட மாட்டார். இதேபோல் மருத்துவர்களும் அவ்வப்போது தவறு செய்கிறார்கள். ஆனால் பெரும்பாலும் அவர்களின் நோயாளிகள் நன்றாக இருந்தால், அவர்கள் நல்ல மருத்துவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

இதன் பொருள், ஒரு ஒழுக்கமான நபரிடம் அவரது தீமைகளை விட அவரது நற்பண்புகள் அதிகமான அளவில் இருக்கும். அல்லது எவரிடம் அவரது நற்பண்புகளை விடத் தீமைகள் அதிகமாக இருக்குமோ அவர் ஒரு ஒழுக்கக்கேடான நபர் ஆவார். இது மற்ற மார்க்கங்கள் கூறுவதுபோல் இல்லை. அவர்களின் பார்வையில், ஒரு நபர் சுத்தமான, முழுமையான மற்றும் நல்லொழுக்கமுள்ள வாழ்க்கையை வாழலாம். ஆனால் அவர் ஒரு தவறை செய்து விட்டால் அது அவரை ஒழுக்கக்கேடானவர் என்று கண்டிக்கப் போதுமானதாகும். இஸ்லாமிய அணுகுமுறை இதற்கு மாற்றமானதாகும். இஸ்லாத்தில் ஒரு ஒழுக்கமான நபர், நாணயத்துடனும் நேர்மையுடனும் சரியானவற்றைச் செய்வதற்கு எந்த அளவு முயற்சி செய்து கொண்டிருப்பார் எனில் அவரது நற்பண்புகள் அவரது தவறுகளை மூடிக்கொள்ளும் அளவிற்குப் பெருமளவில் இருக்கும்.

உண்மை என்னவென்றால், மற்ற மார்க்கங்களின் போதனைகள் ஷரீஅத்தை தன்னிச்சையாகக் கருது -கின்றன. அவர்களைப் பொருத்தவரை அது சட்டம் வழங்குபவரின் விருப்பத்தைப் பெறுவதற்குரிய கட்டளைகளைத் தவிர வேறில்லை. சிறிதளவு மீறல் அபராதத்தை வரவழைக்கிறது. மன்னிப்பு இல்லை; விதிவிலக்கு இல்லை; மென்மை இல்லை. ஷரீஅத் அவர்களின் கூற்றுப் படி, தண்டனைகளின் கையேடே தவிர வேறில்லை.

ஷரீஅத் குறித்த இஸ்லாமிய பார்வை முற்றிலும் வேறுபட்டது. ஷரீஅத்தின் சடங்குகளைப் பேணுவது அசல் குறிக்கோள் அல்ல. அவை உண்மையில் நல்ல வாழ்க்கையை மேம்படுத்த உதவும் பயிற்சிகளே ஆகும். அது உள்ளத்தின் வாழ்வாகும். எனவே, நீங்கள் பரிந்துரைக்கப்பட்ட ஒரு சடங்கைச் செய்யத் தவறினால், அந்த விடுதல் அல்லது அந்தப் பிழையானது குறிப்பிட்ட அந்த சடங்கிற்குரிய குறிக்கோளை மீறாத வரை, நீங்கள் உடனடியாக தண்டனையைப் பெற மாட்டீர்கள். எவ்வாறாயினும், அவ்வப்போது இவ்வாறு தவறு செய்வது இஸ்லாத்தில்

அனுமதிக்கப்படுகிறது என்று இதற்கு பொருளல்ல. அது அப்படி இல்லை. வேண்டுமென்றே தவறு செய்வது நல்லொழுக்க வாழ்க்கையிலிருந்து ஒரு வகையான விடுமுறையைப் பெறுவது போலாகும். இது கிளர்ச்சி ஆகும். மேலும் கிளர்ச்சி நிச்சயமாக அனுமதிக்கப்பட -வில்லை. பள்ளித் தேர்வில் ஒரு மாணவர் ஒரு கேள்விக்கு பதிலளிக்க, வேண்டுமென்றே மறுத்து விட்டால், நான் பதில் அளிக்கப் போவதில்லை என்று கூறினால், அவரது செயல் ஒரு வகையான ஒழுக்க -மின்மையாகக் கருதப்படும். அவர் தண்டனைக்குரியவர் ஆகிறார். இது கல்வி நிறுவனத்தை அவமதிக்கும் செயலாகும். ஆனால் ஓரிரு கேள்விகளுக்கு அவரால் பதிலளிக்க முடியவில்லை என்றால், அது வேறு விஷயம். அது எந்தத் தண்டனையையும் பெற்றுத் தராது. ஆனால் வேண்டுமென்றே மறுப்பது முற்றிலும் வேறு விஷயமாகும்.

### ஒழுக்கம் கற்பிக்க முடியுமா?

ஒழுக்கத்தைக் கற்று கற்பிக்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது. இதற்கான பதில், ஏன் முடியாது என்பதாகும். ஆனால் இது ஒரு பொதுவான பதிலே ஆகும். ஆனால் இந்தக் கேள்வி ஒருவரிடம் நேரடியாக கேட்கப்படும்போது: உங்கள் ஒழுக்க வாழ்க்கையை மேம்படுத்த உங்களால் முடிந்த அனைத்தையும் செய்துள்ளீர்களா? நீங்கள் விரும்பிய மாற்றத்தை சந்தித்தீர்களா? என்று கேட்டால் பதில் பொதுவாக: ‘இல்லை, நான் முயற்சித்தேன். ஆனால் அது மிகவும் கடினம்.’ ஒழுக்கத்தை மேம்படுத்த முடியுமா என்று ஒரு குழுவில் உள்ள யாரிடமாவது கேளுங்கள். பதில்; ஆம். ஆனால் சம்பந்தப்பட்ட நபர் உண்மையில் அவரது ஒழுக்கத்தை மேம்படுத்துவதில் வெற்றி பெற்றாரா என்று நீங்கள் கேட்டால், ‘நான் என்னால் முடிந்ததைச் செய்தேன். ஆனால் நான் வெற்றி பெறவில்லை’ என்று அவர் கூறுவார்.

இந்த நிலை முரண்பாடானது. பெரும்பாலான விஷயங்களில், மற்றவர் -களைப் பற்றி நமக்கு ஒரு மோசமான கருத்து உள்ளது. ஆனால் நம்மைப் பற்றி ஒரு நல்ல கருத்து உள்ளது. ஆனால் நல்லொழுக்க மாற்றம் மற்றும் முயற்சி மூலம் முன்னேற்றம் என்ற விஷயத்தில், மனித நடத்தை வேறு வழியில் உள்ளது. எப்படியோ, மற்றவர்கள் தங்கள் ஒழுக்கத்தை மேம்படுத்த ஏதாவது செய்ய முடியும் என்று தோன்றுகிறது. ஆனால் நாம் அல்ல. சில விசேஷ சிரமங்கள் அல்லது சூழ்நிலைகள் நம்மைத் தடுக்கின்றன என எண்ணுகிறான். இருப்பினும், திருக்குர்ஆன் இந்த விஷயத்தில் மிகவும் தெளிவாக உள்ளது. திருக்குர்ஆனின் படி, ஒழுக்க வாழ்வு மேம்படுத்தப்பட முடியும். திருக்குர்ஆன் கூறுகிறது:

فَذَكِّرْ اِنْ نَّفَعَتِ الذِّكْرٰى

தொடர்ந்து அறிவுறுத்துங்கள். ஏனென்றால் அறிவுரை எப்போதும் பயன் தருகிறது. (87:10)

ஒரு நபி தமது மக்களுக்கு நல்ல அறிவுரைகளை வழங்குவதில் சோர்வடையவே மாட்டார். நல்ல அறிவுரை ஒருபோதும் பலன் தராமல் போகாது. இந்த விஷயத்தில் திருக்குர்ஆன் நிச்சயமாக நம்பிக்கையுடன் உள்ளது. மேலும் இது கவனிக்க வேண்டிய ஒன்றாகும். தான் கற்பித்த அனைத்திற்கும் திருக்குர்ஆனையே அடிப்படையாக பயன்படுத்திய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், இந்தத் தூய நூலின் இந்தப் போதனையை உறுதியாகக் கடைப்பிடித்ததில் ஆச்சரியமில்லை. அவர்கள் தம்மைப் பின்பற்றுபவர் -களுக்கு மீண்டும் மீண்டும் வெவ்வேறு வழிகளில் சொன்னது நம்பிக்கையைத் தூண்டியது. ஒருமுறை அவர் கூறினார்:

‘நாம் பாவம் செய்தவர்கள், அதனால் நமது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுமா?’ என்று நினைக்கா -தீர்கள். மனிதன் தவறு செய்கிறான். ஆனால் அவன் பாவம் செய்யும் சுயத்தை வெல்லக்கூடிய ஒரு காலம் வருகிறது. பாவம் செய்யும் சுயத்தை வெல்லும் இந்த சக்தி மனிதனின் இயல்பிலும் வைக்கப்பட்டுள்ளது. நீர் நெருப்பை அணைக்கிறது. இது அதன் இயல்பின் ஒரு பகுதி. நீங்கள் அதை எவ்வளவு சூடாக்கினாலும், நெருப்பில் தண்ணீர் விழும்போது அதை அணைத்து விடுகிறது. அது இயற்கையானது. மனிதனும் இயற்கையாகவே தூய்மைப்படுத்துபவன் ஆவான். ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த சுத்திகரிப்புத் தன்மை உள்ளது. நீங்கள் பாவத்தில் ஈடுபட்டதால் தோற்கடிக்கப் -பட்டதாக உணராதீர்கள். பாவம் என்பது ஒரு துணியின் மேற்பரப்பில் படியும் ஒரு கறை போன்றது. அதை கழுவி விடலாம். உங்கள் பழக்கவழக்கங்கள், உங்கள் மனநிலைகள் மீது உங்கள் உணர்வுகள் எப்போதும் ஆதிக்கம் செலுத்தலாம். அழுது, அழுது இறைவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள் ‘அவன் ‘உங்கள் பிரார்த்தனை -களை வீணாக்கமாட்டான். அவன் இரக்கம் நிறைந்தவன் ஆவான்.’ (அல் - பத்ர், 1907)



வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த தூதுச் செய்தி நம்பிக்கை நிறைந்தது. இது திருக்குர்ஆனின் செய்தி ஆகும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் அவர்களது பாணியில்

விளக்கிக் கூறப்பட்டுள்ளது. திருக்குர்ஆனில் ஊடுருவி இருக்கும் இந்த நம்பிக்கை வேறு எந்த வேத நூலிலும் இல்லை. மேலும் இந்த விஷயம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் விளக்கப்பட்டுள்ள விதம் வேறு எவராலும் கூறப்படவில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த மேற்கோளிலிருந்து தெளிவாகத் தெரிவது என்னவெனில், மனித இயல்பில் உள்ளமைந்த ஒன்று உள்ளது. அது பயன்படுத்தப்படும் போது, அனைத்து பாவங்களையும் கழுவுகிறது, மேலும் விரும்பிய முன்னேற்றம் அனைவரும் காணும் வண்ணம் ஏற்பட்டு விடுகிறது.

### மனிதன் தன் இயற்கையான நிலையில் நல்லவனா கெட்டவனா?

ஒரு கேள்வி கேட்கப்படலாம். மனிதன் தீமையை எதிர்க்கும் திறன் கொண்டவன் என்றால், உலகில் ஏன் இவ்வளவு தீமைகள் உள்ளன? அல்லது, உலகில் நன்மையை விட தீமை ஏன் அதிகம் உள்ளது?

இந்தக் கேள்விக்கு நான் முன்பு மற்றொரு சந்தர்ப்பத்தில் பதிலளித்தேன். ஆனால் கடந்த சில நாட்களாக, வெவ்வேறு இடங்களைச் சேர்ந்த சுமார் அரை டஜன் பேர் இந்தக் கேள்வியை என்னிடம் மீண்டும் எழுப்பியுள்ளனர். ஒரே கேள்வியை ஒரே நேரத்தில் பலர் எழுப்புவது மிகவும் விசித்திரமானது. எனவே அந்தக் கேள்விக்கான பதிலைத் தொடர்கிறேன்.

கேள்வி என்னவென்றால்: மனிதன் இயல்பிலேயே நல்லவன் என்று சொல்ல முடியுமா? இறைவன் மனிதனுக்கு எல்லா விதமான திறன்களையும் அளித்துள்ளான். மேலும் அவற்றை நல்ல அல்லது கெட்ட வழியில் பயன்படுத்துவதற்கான சுதந்திரத்தையும் விவேகத்தையும் அவனுக்கு அளித்துள்ளான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். விலகிச் செல்லும் வழிகள் அவனுக்குத் தெளிவாகக் காட்டப்படுகிறது, பின்னர் அவன் சுதந்திரமாக செயல்பட விடப்படுகிறான். திருக்குர்ஆன் கூறுகிறது:

إِنَّا هَدَيْنَٰهُ ٱلسَّبِيلَ إِمَّا شَاكِرًا وَإِمَّا كَفُورًا

நாம் அவனுக்கு வழியைக் காட்டியுள்ளோம். அவன் நன்றி செலுத்துபவனாகவோ அல்லது நன்றி கொன்றவனாகவோ இருக்கட்டும். (76:4)

### நன்மை அதிகமா அல்லது தீமை அதிகமா?

அவதானிப்பதில் ஏற்படும் பிழைகளின் காரணமாக, தீமையை விட நன்மையே உலகில் அதிகமாக உள்ளது என்ற உண்மை அடிக்கடி மறந்து விடுகிறது. ஒரு திருடனை எடுத்துக் கொள்வோம். அவன் உண்மையில் திருடவே செய்கிறான். ஆனால் ஒவ்வொரு திருட்டுக்கும் எதிராக, அவன் பல நல்ல விஷயங்களைச் செய்கிறான்.



உதாரணமாக, அவன் மக்களை இனிமையான முறையில் சந்திக்கிறான். அவன் தாராள மனப் -பான்மையுடன் தொண்டு செய்கிறான். அவன் தனது பெற்றோருக்கு சேவை செய்கிறான். அவர்களை நன்றாக கவனித்துக் கொள்கிறான். இப்படி எண்ணிப் பார்த்தால், ஒவ்வொரு மனிதரிடமும் உள்ள நன்மை தீமையை விட மேம்பட்டிருப்பதைக் காணலாம்.

இவ்வாறு ஒவ்வொரு மனிதனையும் தனித்தனியாக எடுத்துப் பார்க்கும் போது தீமையை விட நல்ல காரியங்களையே அதிகம் செய்கிறார்கள். இவ்வாறு உலகில் உள்ள நன்மை மற்றும் தீமையின் அளவைக் கணித்தால் நிச்சயமாக தீமையை விட நன்மையின் அளவு சற்று அதிகமாகவே இருக்கும். சற்று அல்ல; நன்றாகவே அதிகமாக இருக்கும். பின்னர் பொதுவாக மக்கள் ஏன் தீய செயல்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாக நினைக்கிறார்கள்? இந்தத் தவறான எண்ணம் இரண்டு சூழ்நிலைகளின் விளைவாகும். ஒன்று, முறையான நம்பிக்கை மற்றும் நிராகரிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், நிச்சயமாக நிராகரிப்பவர்கள் மிகப் பெரிய எண்ணிக்கையில் காணப்படுவார்கள் என்பது நிதர்சனமான உண்மையாகும். இரண்டாவது சூழ்நிலை என்னவென்றால், பெரும்பாலான மக்கள் ஏதோ ஒரு ஒழுக்கக் குறைபாட்டால் பாதிக்கப்படுகின்றனர். இதன் காரணமாக, தீமையின் அளவு பெரியதாகத் தெரிகிறது.

ஆனால் இது ஒரு மாயையே ஆகும். உலகில் நன்மையை விட தீமை அதிகமாக உள்ளது என்பதற்கு இந்த இரண்டு சூழ்நிலைகளும் போதுமான ஆதாரங்கள் அல்ல.

நிச்சயமாக, கா.ஃ.பிர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம். ஆனால் அறிவொளி பெற்று நிராகரிக்கும் கா.ஃ.பிர்களின் எண்ணிக்கை மேற்பரப்பில் தோன்றுவதை விட மிகக் குறைவே ஆகும். மற்றபடி கா.ஃ.பிர்கள் என அழைக்கப்படுபவர்கள் பெரும்பாலும் தங்கள் நம்பிக்கைகளை உண்மையில் பகுப்பாய்வு செய்யாதவர்களாக அல்லது சோதிக்காதவர்களாகவே உள்ளனர். இந்த அடிப்படையில் கா.ஃ.பிர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் இறைவனின் பார்வையில் உண்மையில் கா.ஃ.பிர்கள் அல்ல. அவர்கள் முடிவெடுக்க

இன்னும் வாய்ப்பு உள்ளது. அல்லது இது நடக்க -வில்லை என்றால், அவர்கள் சுதந்திரமாகவும் பொறுப்புடனும் செய்த அவர்களின் செயல்கள், அவர்களின் தார்மீக தகுதியை நிர்ணயிப்பதில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். இவ்வாறு எடை போட்டால், எத்தனை பேர் நல்லவர்களாகவும், எத்தனை தீயவர்களாகவும் மாறுவார்கள் என்று சொல்ல முடியுமா? இவ்வாறு பார்க்கும்போது, மொத்தத்தில் உலகில் நிராகரிப்பை விட நம்பிக்கையே அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது. எனவே, விகிதாச்சாரப்படி, உலகில் தீமையை விட நன்மை அதிகம் என்று சொல்வது பாதுகாப்பானது.

இரண்டாவது சூழ்நிலையும் அதாவது, எல்லாரும் அல்லது பெரும்பாலான மக்கள் சில தார்மீக ஒழுக்கக் குறைபாட்டால் அல்லது பிற தீமைகளால் பாதிக்கப் -படுகிறார்கள் என்பதும் கேள்விக்குரியதே ஆகும். உண்மையில், இந்த விஷயத்தைத் தீர்ப்பதற்கான வழி இதுவல்ல. கேள்வி: பெரும்பாலான மக்கள் நல்லவர்களா கெட்டவரா? பெரும்பாலான மனிதர்கள் நல்லவர்களாக இருந்தால், உலகில் நன்மையின் அளவு அதிகமாக இருக்கும். பெரும்பாலான மக்கள் நல்ல தார்மீக குணங்களைக் கொண்டிருந்தால், நல்லது மேலோங்கு -கிறது. மொத்தத்தில் உலகில் உள்ள மக்களின் மொத்த நன்மையைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது, நன்மையின் பக்கம் உள்ள சான்றுகள் மறுக்க முடியாததாகக் காணப்படும்.

இந்த நேரத்தில் சிலர் இவ்வாறு குறுக்கிடலாம். பெரும்பாலான மக்கள் ஏதாவது ஒரு தண்டனைக்கு உரியவர்களே என்றால், பிறகு ஷெய்த்தான் வெற்றி பெற்றான்; இறைவன் தோற்று விட்டான் என்பதைத் தவிர வேறு எதை அது நிரூபிக்கிறது என்று கேட்கிறார்கள். ஆனால் நான் சொல்வேன்: இல்லை, இன்னும் இறைவனே வெற்றியாளன் மற்றும் ஷெய்த்தானே தோற்றவன். ஏனெனில், இறுதியில், அதாவது, அனைத்து கணக்குகளும் தீர்க்கப்பட்ட பிறகு, அனைத்து மனிதர்களும் இறைத் தோட்டத்திற்குள் நுழைவார்கள் என்று இஸ்லாம் கூறவில்லையா?:

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُوْنِ

மேலும் ஜின்களையும் மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவே அன்றி நான் படைக்கவில்லை. (51:.57)

(நரகத்தில்) பல்வேறு சோதனைகளின் மூலம், தம்மைப் படைத்தவனின் பிம்பங்களாக மாறி விட்ட எந்தவொரு மனிதனும், இன்னும் நரகத்தில் இருக்க வேண்டும், எல்லா நல்ல மனிதர்களின் இறுதி இருப்பிடமான தோட்டத்திற்குச் செல்லக் கூடாது என்று யார்தான் நினைப்பார்களா? மற்ற ஆதாரங்களின் மூலமும்,



நரகம் அதனுள் இருக்கும் அனைவரையும் காலி செய்யும் ஒரு காலம் வரும் என்பதையும், அவர்கள் அனைவரும் தோட்டத்தில் அனுமதிக்கப்படுவார்கள் என்பதையும் நாம் அறிவோம். அனைவரும் அல்லாஹ்வின் நல்ல அடியார்களாக மாறுவார்கள். இது நடக்கும் போது, ஷெய்த்தான் எங்கே இருப்பான்? மற்ற படைப்புகளைப் போலல்லாமல், அவன் தனியாக அமர்ந்திருப்பான் என்று நினைக்கிறீர்களா? அவன் எல்லாத் தீமைகளிலிருந்தும் சுத்திகரிக்கப்பட்ட பிறகு தோட்டத்தில் மற்றவர்களுடன் சேருவான். ஆகவே, மனிதர்களைத் தவறாக வழிநடத்தும் அவனது தனிப்பட்ட நோக்கத்தில் அவன் தோற்கடிக்கப்படுவான். மேலும் அவன் ஷெய்த்தானிய தன்மையிலிருந்தும் தூய்மையாக்கப்படுவான். ஷெய்த்தானை வெற்றிக் கட்சியாகக் கருதுபவர்கள் தோட்டத்தில் ஷெய்த்தானைக் காணும்போது தம்மைத் திருத்திக் கொள்வார்கள். ஏனெனில் ஷெய்த்தான் அப்போது ஷெய்த்தானாக இருக்க மாட்டான்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்...)

# மார்க்க அறிவுப் புத்தகம் 8



தமிழாக்கம்: M.M. இப்ராஹீம்

## 3. இஸ்லாமிய வரலாறு

51. பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தில் மதீனாவில் வாழ்ந்து வந்த அரபு மற்றும் யூத கோத்திரங்களின் பெயர்களைக் கூறுக:

அரபிகள் இரண்டு கோத்திரங்களாவர்:
1) அவ்ஸ் 2) கஸ்ரஜ் என்போராவர்.
இவர்கள் நீங்கலாக மூன்று யூத கோத்திரங்கள் வாழ்ந்தனர்.
அவர்கள்:
1) பனூ கைன்கா
2) பனூ நதீர்
3) பனூ குரைஸா ஆகியோர் ஆவர்.

52. 'உஹது' யுத்தம் எப்போது நிகழ்ந்தது?

ஹிஜ்ரி 3-ஆம் ஆண்டில் நிழ்ந்தது. மக்காவாசிகள் தமது முந்தைய தோல்விக்குப் பழி தீர்ப்பதற்காக இந்த யுத்தத்தைச் செய்தனர்.

53. 'அப்துல்லாஹ் பின் உபய்' என்பவர் யார்?

'அப்துல்லாஹ் பின் உபய்' என்பவர் நயவஞ்சகர்களின் தலைவர் ஆவார். உஹது யுத்தத்தில் முஸ்லிம்கள் மதீனாவுக்கு வெளியே வந்து மக்கத்தினருடன் யுத்தம் செய்யும் நிலை ஏற்பட்டது. அப்துல்லாஹ் பின் உபய், பெருமானார் (ஸல்) அவர்களின் முடிவை ஏற்க மறுத்து முன்னூறு நபர்களுடன் திரும்பிச் சென்று விட்டார்.

54. உஹது யுத்தத்தில் முஸ்லிம்களின் எண்ணிக்கை என்ன? எதிரிகள் எத்தனை பேர்?

அப்துல்லாஹ் பின் உபய் 300 முஸ்லிம்களைப் பிரித்துச் சென்ற பின்பு முஸ்லிம்களில் 700 நபர்கள் இருந்தனர். எதிரிகளின் தரப்பில் இருந்தவர்கள் 3000 பேர் ஆகும்.

55. உஹது யுத்தத்தில் முஸ்லிம்களைப் பின்புறத்திலிருந்து தாக்கி பெரும் சேதத்தை விளைவித்தது யார்?

மக்கத்தினரின் படைத் தளபதி காலித் பின் வலீத் ஆவார். இவர் பின்பு முஸ்லிமாகி பெரும் தியாகங்களைச் செய்தார்.

56. தல்ஹா என்பவர் யார்? இவர் எவ்வாறு அந்த யுத்தத்தில் தமது கையை இழந்தார்?

ஹஸ்ரத் தல்ஹா என்பவர் ஒரு நபித்தோழர் ஆவார். எதிரிகளின் அம்புகள் ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களின் முகத்தைக் குறி வைத்து வந்து கொண்டு இருப்பதைக் கண்ட அவர்கள் தமது அன்பிற்குரிய எஜமானரின் முகத்தைக் காக்க வேண்டுமே என்ற எண்ணத்தில் தமது கையை விரித்து அந்த அம்புகளைத் தாங்லானார். இவ்வாறு அவர் தமது கரத்தை இழந்தார்.




57. அகழ் யுத்தம் எபபோது நிகழ்ந்தது? அதனை ஏன் அகழ் யுத்தம் என்று கூறுகிறார்கள்?

'அகழ் யுத்தம்' ஹிஜ்ரி 5-ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்களின் ஆலோசனைப்படி மக்கமா நகரைச் சுற்றிலும் அகழ் தோண்டப்பட்டிருந்ததால் இந்த யுத்தத்திற்கு இப்பெயர் வரலாயிற்று.

58. 'ரிழ்வான் உடன்படிக்கை' (மரத்தின் கீழ் செய்யப்பட்ட உடன்படிக்கை) என்பது என்ன?

ஹுதைபிய்யா உடன்படிக்கையின்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் தலைமையின் கீழ் சென்ற தூதுக்குழு மக்காவாசிகளால் படுகொலை செய்யப்பட்ட -தாக வதந்தி பரப்பினர். அப்போது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் முஸ்லிம்களை அழைத்து 1500 பேர்கள் இருந்த அவர்களிடம் 'தாங்கள் வெற்றி பெறாமல் திரும்புவதில்லை' என்ற உறுதிமொழியை வாங்கினார்கள். இதனையே 'ரிழ்வான் உடன்படிக்கை' என்கிறோம்.

59. ஹுதைபிய்யா உடன்படிக்கை எப்பொழுது கையெழுத்து இடப்பட்டது? அதில் ஒப்பமிட்டவர்கள் யார்?

மக்காவாசிகள் மீண்டும் மக்காவில் நுழையலாம் என்று அனுமதி வழங்கி ஹிஜ்ரி 6-ஆம் ஆண்டில் ஹுதைபிய்யா என்னுமிடத்தில் நடந்தது. இது மக்காவாசிகள் மற்றும் முஸ்லிம்களிடையே நிகழ்ந்தது.

60. ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவை நோக்கிச் சென்றபோது அவர்களுடன் எத்தனை பேர் சென்றனர்?

பைபிளில் (உபாகமம் 33:2) முன்னறிவிக்கப்பட்டது போன்று சரியாக பத்தாயிரம் முஸ்லிம்கள் சென்றனர்.

61. மக்காவில் வெற்றி வீரராக நுழைந்த ஹஸ்ரத் பெரு:மானர் (ஸல்) அவர்கள் கஅபாவில் இருந்த 360 சிலைகளையும் அழித்தபோது திருக்குர்ஆனின் எந்த வசனத்தை ஓதினார்கள்?

பெருமானார் (ஸல்) அவர்கள் கஅபாவில் நுழைந்த போது திருக்குர்ஆனின் 17-வது அத்தியாயத்தின் 82-வது வசனத்தை ஓதினார்கள்:

'உண்மை வந்து விட்டது. போய் அழிந்து விட்டது. நிச்சயமாக பொய் அழியக் கூடியதே.' இதுவும் ஒரு முன்னறிவிப்பாகவே நிறைவேறியது.

62. எந்தச் சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் 'லாத்தஸ்ரீப அலைக்குமுல் யவ்ம்' என்று கூறினார்கள்? (இன்று உங்கள் மீது எந்தப் பழிவாங்குதலும் இல்லை)

ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவில் வெற்றியாளராக நுழைந்தபோது மக்காவில் முஸ்லிம் -களுக்குக் கொடுமை இழைத்த மக்கள் ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டபோது அவர்களிடம் ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

63. 'அல்லாஹ்வின் வாள்' என்ற இப்பட்டம் யாருக்கு வழங்கப்பட்டது?

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு இப்பட்டம் வழங்கப்பட்டது.

64. 'ஹஜ்ஜத்துல் விதா' என்பது யாது?

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் செய்த இறுதி புனித யாத்திரை 'ஹஜ்ஜத்துல் விதா' எனப்படுகிறது.

65. 'ஜன்னத்துல் பகீ' என்பது என்ன?

ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களின் நெருங்கிய தோழர்கள், மகன்கள் மற்றும் உறவினர்களை அடக்கம் செய்த மதீனாவில் உள்ள ஒரு கல்லறைத் தோட்டம் 'ஜன்னத்துல் பகீ' என்று அழைக்கப்படுகிறது.

66. இஸ்லாத்திற்கு வருமாறு ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களால் கடிதம் அனுப்பப் பெற்ற ஐந்து மன்னர்கள் யார்?

பின்வரும் ஐவர் ஆவர்:

1) ரோமானியப் பேரரசர் 2) ஈரான் மன்னர்
3) எகிப்து மன்னர் 4) அபிஸீனிய மன்னர்
5) பஹ்ரைன் மன்னர்.

67. திரு நபி (ஸல்) அவர்களின் கடிதம் கிடைக்கப் பெற்றவுடன் அபிஸீனிய மன்னன் எவ்வாறு நடந்து கொண்டார்?

அம்மன்னர் அந்தக் கடிதத்திற்கு மிகவும் மதிப்பளித்து அதனை ஒரு யானைத் தந்தத்தினால் செய்யப்பட்ட பெட்டியில் வைத்தார். 'இந்தக் கடிதம் என்னுடன் இருக்கும் வரை எனது அரசாட்சியும் பாதுகாப்பாக இருக்கும்' என்று கூறினார். இது உண்மையாகவும் மாறியது. பிற்காலத்தில் இஸ்லாமியப் பேரரசு எல்லாத் திசைகளிலும் விரிவடைந்த போது எவ்விதத் தொல்லையுமில்லாமல் அமைதியாக ஆட்சி செய்து வந்தார்.

68. பெருமானார் (ஸல்) அவர்களின் கடிதம் வாசித்துக் காட்டப்பட்டபோது ஈரானிய மன்னர் எவ்வாறு நடந்து கொண்டார்?

அவர் மிகுந்த கோபமடைந்து அந்தக் கடிதத்தைக் கிழித்து வீசினார். ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களைக் கைது செய்யவும் உத்தரவிட்டார்.

69. இந்த செய்தியைக் கேள்வியுற்ற பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியது என்ன?

'எனது கடிதத்திற்கு நேர்ந்த கதியையே அல்லாஹ் அவரது ஆட்சிக்கும் ஏற்படுத்துவான்' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

70. இந்த முன்னறிவிப்பு எவ்வாறு நிறைவேறியது?

இந்த உத்தரவைச் செயல்படுத்தும் முன் அந்தப் பேரரசர் தனது சொந்த மகனாலேயே கொலை செய்யப்பட்டார். பின்னர் வந்த பேரரசர் அந்த உத்தரவைத் திரும்பப் பெற்றுக் கொண்டார். பிற்காலத்தில் இஸ்லாமியப் பேரரசு விரிவடைந்தபோது ஈரானியப் பேரரசு அழிக்கப் -பட்டது. அந்தக் கிஸ்ரா நாடிழந்தார்.

71. 'மூத்தா' யுத்தத்தில் தளபதியாக நியமிக்கப்பட்டது யார்?

'ஹஸ்ரத் ஸெய்து பின் ஹாரிதா' என்பவர் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

*(தொடர்ச்சி 23-ஆம் பக்கம்...)*



ஹுதைபிய்யாவில் கட்டப்பட்டுள்ள பள்ளிவாசல்

# உலக அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான திறவுகோல்




ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலின் புதிய வளாகத்தைத் திறந்து வைத்து அமைதிக் கருத்தரங்கில் நிகழ்த்திய சொற்பொழிவு

**தமிழாக்கம்: J.S. சலீம் அஹ்மது**

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

وَمَنۡ دَخَلَهٗ كَانَ اٰمِنًا அதில் (அல்லாஹ்வின் புனித ஆலயத்தில்) நுழைபவர் அமைதி பெற்றவராகி விடுகின்றார். (3:98)

தங்களுக்கு அமைதியைத் தேடவும், மற்றவர்களின் அமைதிக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகவும் திகழவேண்டுமென இவ்வசனம் தொழுகையாளிகளின் கவனத்தை ஈர்க்கின்றது. ஏனென்றால், பள்ளிவாயில்கள் புனித கஅபாவின் பிம்பமாக இருக்கின்றன. மேலும், தினந்தோறும் ஒவ்வொரு தொழுகையின்போதும், முஸ்லிம்கள் ஃபாத்திஹா என்ற அதிகாரத்தை ஓதுகின்றனர். அவ்வதிகாரம் இறைவன், அனைத்து உலகங்கள் மற்றும் அனைத்து மக்களின் அதிபதி என இயம்புகிறது; முஸ்லிம்களை மட்டுமல்ல. உண்மை என்னவெனில், அவன் கிறித்தவர்கள், யூதர்கள், இந்துக்கள் என அனைத்து மதங்களைச் சார்ந்த மக்களையும் பரிபாலிக்கின்றான். அவர்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்குகின்றான். அவன் அவர்களுக்கு வாழ்வளித்து, தனது அளப்பரிய அருள் மற்றும் கருணையால் அவர்களின் தேவைகளை நிறைவேற்று -கின்றான். எனவே, நாம் அனைவரும் அனைத்துலக இறைவனின் படைப்பினங்கள் என்பதால், முஸ்லிம்கள் பிற மத மக்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடாது என்றும், பிறருக்கு எதிராக பகைமை பாராட்டக் கூடாது என்றும், பிறரைக் குறித்து தவறாகப் பேசக் கூடாது என்றும் திருக்குர்ஆனின் ஆரம்பத்திலேயே போதிக்கப்பட்டுள்ளது. அவனது கருணையைக் கண்டு கொள்ளாதோர், அவனது இருப்பையே மறுப்போர் ஆகியோரையும் அவனே பரிபாலிக்கின்றான். அவன் அவர்களைப் பாதுகாத்து அவர்களது முயற்சிக்கேற்ற நற்பலன்களை வழங்குகின்றான். எனவே, அப்படிப்பட்ட அனைத்துலகங்களின் இறைவனின் நேசத்தைப் பெறுவதற்காக மட்டுமே, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் அமைதியையும், ஒற்றுமையையும் உலகம் நெடுகிலும் உருவாக்கப் பாடுபடுகிறது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: "அப்படிப்பட்ட கருணைமிக்க ஓர் இறைவன் மீது நம்பிக்கை கொண்டவர்கள் மற்றவர்களின் நலனையும் அமைதியையும் குலைக்க ஒருபோதும் முனைய மாட்டார்கள்." எனவே, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் இறை நெருக்கத்தையும், இறை அன்பையும் பெறுவதற்காகவே உலகம் முழுவதிலும் அமைதியும் ஒற்றுமையும் மேலோங்க அரும்பணியாற்றி வருகிறது. ஜமாஅத் நிறுவப்பட்ட நாள் முதல் இதுவே அதன் வழிமுறையாக இருந்துள்ளது. அமைதிக் கருத்தரங்கங்கள் மற்றும் அதுபோன்ற நிகழ்ச்சிகள் நடத்துவதன் வாயிலாக 'மனிதம்' என்ற பதாகையின் கீழ் மக்களை ஒன்றிணைப்பதே நமது நோக்கமாகும். "உண்மையான, நிலையான அமைதியை நிலை நிறுத்தி அதன் மூலம் மனித இனம் தம்மைத்தாமே அழிவுக்குள்ளாவதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளச் செய்வதே நமது பணியாகும்" என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள். உண்மையிலேயே உலகம் அழிவின் விளிம்பில் நின்று



கொண்டிருக்கிறது என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் நமது குறிக்கோள் ஆகும். மேலும் இன்றைய சமுதாய மக்களை மட்டுமின்றி நமது வருங்கால சந்ததிகளையும் உள்ளடக்கிய முழு மனித இனத்தையும் அதன் பொறுப்புகளை உணரச் செய்ய வேண்டும்.

அமைதியை நிலைநிறுத்துவதின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தியவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள். "அமைதியை நிலை நிறுத்துவதில் தான் இவ்வுலகின் இரட்சிப்பு இருக்கின்றது. சமுதாய முன்னேற்றம் மற்றும் சமுதாய வளர்ச்சியின் கதவைத் திறப்பதற்கான பொற்திறவுகோலாக அமைதி திகழ்கிறது."



ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: வல்லமைமிக்க இறைவனை விட்டும் மக்கள் விலகிச் சென்று உலகியல் தேடலைத் தங்களது இறுதி இலட்சியமாக ஆக்கிக் கொண்டதி-னால் இத்தகைய தூதுச் செய்திகள் செவிமடுக்கப்படாமலேயே இருந்து வருகிறது என நான் எண்ணுகிறேன். ஆனால் அத்தகைய வீணான பேராசை மிகுந்த நோக்கங்களினால் தான் உலகம் இரண்டு உலகப் போர்களை நோக்கி இழுத்துச் செல்லப்பட்டது. அவ்வாறு இருந்தும் கடந்த கால அகோர சம்பவத்திலிருந்து படிப்பினை பெறாமல் உலகம் மீண்டும் மோதல்களாலும் போர் நடவடிக்கைகளாலும் சூழப்பட்டுள்ளது.

"முஸ்லிம்களோ அல்லது முஸ்லிம் அல்லாதவர்களோ இதற்கான பிரத்தியேக பழியை ஏற்க வேண்டும் என நான் கருதவில்லை. கொடூரம், அநீதியிழைத்தல் ஆகியவற்றுக்கு ஒரு குறிப்பிட்ட நாடு அல்லது ஒரு குறிப்பிட்ட பிரிவினர் மட்டுமே பொறுப்பாளியாவர் என்றும் நான் கூறமாட்டேன்" என்றும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டார்கள்.

மார்க்க சுதந்திரத்தை அல்லது மார்க்கத்தையே அழிப்பதற்காக மேற்கொள்ளப்படும் மாபெரும் ஒருங்கிணைந்த முயற்சிகளினால் உருவெடுக்கும் உச்சகட்ட சூழ்நிலைகளில் செய்யப்படும் தற்காப்புப் போர் நடவடிக்கையை மட்டுமே இஸ்லாம் அனுமதிக்கின்றது. புவிசார் அரசியல் பேராசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான போர்களை இஸ்லாம் ஒருபோதும் அனுமதித்ததில்லை. இனியும் ஒருபோதும் அனுமதிக்காது. அமைதியை நிலைநாட்டுவதற்கான வெற்றி வாய்ப்பு எவ்வளவு தூரத்தில் தென்பட்டாலும் பரவாயில்லை. அமைதியை ஏற்படுத்துவதற்காக அதன் இறுதி வழிவரை தொடர்ந்து செல்ல வேண்டும் என இஸ்லாம் அறிவுறுத்துகின்றது.

எல்லாம் வல்ல அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

وَإِن طَائِفَتَانِ مِنَ الْمُؤْمِنِينَ اقْتَتَلُوا فَأَصْلِحُوا بَيْنَهُمَا ۖ فَإِن بَغَتْ إِحْدَاهُمَا
عَلَى الْأُخْرَىٰ فَقَاتِلُوا الَّتِي تَبْغِي حَتَّىٰ تَفِيءَ إِلَىٰ أَمْرِ اللَّهِ ۚ فَإِن فَاءَتْ
فَأَصْلِحُوا بَيْنَهُمَا بِالْعَدْلِ وَأَقْسِطُوا ۖ إِنَّ اللَّهَ يُحِبُّ الْمُقْسِطِينَ

"நம்பிக்கையாளர்களுள் இரு பிரிவினர்கள் தங்களுக்குள் போர் செய்தால் அவ்விரண்டு பிரிவினர்களுக்கிடையே சமாதானம் செய்து வையுங்கள். இதன் பின்னர் அவற்றுள் ஒன்று மற்றொன்றுக்கு எதிராக வரம்பு மீறினால், வரம்பு மீறுகின்ற பிரிவினர் அல்லாஹ்வின் கட்டளையின் பக்கம் திரும்பி வரும் வரை நீங்கள் அவர்களை எதிர்த்துப் போர் செய்யுங்கள். பின்னர் அவர்கள் திரும்பி வந்து விட்டால் அவர்களுக்கிடையே நியாயத்துடன் சமாதானம் செய்து நீதமாக நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீதமாக நடந்து கொள்பவர்களை நேசிக்கிறான்." (49:10)

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இவ்வசனத்தை விளக்கிக் கூறியது என்னவெனில், இரண்டு நாடுகள் போரில் ஈடுபடும்போது மூன்றாம் தரப்பினர் அவர்களை அமைதித் தீர்வின் பக்கம் கொண்டு வர முயல வேண்டும். வரம்பு மீறிய பிரிவினர் தொடர்ந்து போரில் ஈடுபட்டால், தகுந்த, முறையான வழி-வகைகளைப் பயன்படுத்தி ஆக்கிரமிப்புப் படைகளைத் தடுத்து நிறுத்துவதற்காக எதிர் படைகளுடன் ஒன்றிணைந்து செயல்படுவது ஏனைய நாடுகளின் விருப்ப-மாகும். எவ்வாறிருப்பினும், அவர்கள் நிறுத்திக் கொண்டால் அநியாயமான முறையில் பழிவாங்கும் நடவடிக்கை இருக்கக் கூடாது.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُونُوا قَوَّامِينَ لِلَّهِ شُهَدَاءَ بِالْقِسْطِ ۖ وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَآنُ
قَوْمٍ عَلَىٰ أَلَّا تَعْدِلُوا ۚ اعْدِلُوا هُوَ أَقْرَبُ لِلتَّقْوَىٰ ۖ
وَاتَّقُوا اللَّهَ ۚ إِنَّ اللَّهَ خَبِيرٌ بِمَا تَعْمَلُونَ

"நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக நீங்கள் நேர்மையான சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள். மேலும் ஒரு சமுதாயத்தின் பகைமை, உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம் நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது. மேலும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ், நீங்கள் செய்பவற்றை நன்கு அறிகின்றான்." (5:9)

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இந்த வசனத்தை விளக்கிக் கூறுகையில், ஒரு நாட்டின் மீதான பகைமை நீதியின் உண்மையான தரத்தை நிலை நிறுத்துவதிலிருந்தும் உங்களைத் தடுக்கக் கூடாது. அவ்வாறே, போருக்குப்பின் விதிக்கப்படும் தடைகள் ஒரு நாட்டின் சுதந்திரம், முன்னேற்றத்தின் ஆற்றலை கட்டுப்படுத்து-வதையும் எல்லா விதத்திலும் தவிர்க்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

ரஷ்யா - உக்ரைன் போர் குறித்து ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறும்போது, எவ்வாறு எப்பொழுது இந்தப் போர் முடிவுக்கு வரும் என்பதற்கான அறிகுறிகள் இல்லாமலிருப்பது வருந்தத்தக்கது. ஆனால், எப்பொழுது இது ஒரு முடிவுக்கு வரும். ரஷ்யாவுக்குப் பெரும் தடைகள்

விதிக்கப்பட வேண்டும். ரஷ்யாவின் செயல்பாடு-களுக்குத் தகுந்த பரிகாரம் செலுத்துமாறு செய்ய வேண்டும் என்றெல்லாம் சில அரசியல் தலைவர்கள் கூறுவதையும் நிறுத்திக் கொள்ளவில்லை.

தி டைம்ஸ் (The Times) பத்திரிகையின் ஆசிரியர் மேத்யூ பாரிஸ் (Matthew Parris) வெளியிட்ட ஒரு கட்டுரையில், இப்படிப்பட்ட விமர்சனங்கள் தற்போதைய சூழலை மேலும் தீவிரப்படுத்தி பற்றி எரியச் செய்ய வழிவகுப்பதுடன், அமைதி ஏற்படுவதற்கான வாய்ப்புகளையும் குறைத்து விடும் என்றார். மேலும் ''இப்போது பேசப்பட்ட வார்த்தைகள்....... எதிர்வரும் காலம் நெடுகிலும் நீண்ட (எதிர்மறை) நிழற்படிவை உருவாக்கும். அதன் வீரியம் குறித்து நாம் இன்னும் அறியாமையிலேயே இருந்து வருகிறோம்" என்றார். இது குறித்து ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கருத்து கூறுகையில், ஆசிரியரின் இத்தகைய எச்சரிக்கை சரியானதாகவே இருக்கின்றது என்று குறிப்பிட்டார்கள்.



"அவர்களது அழிவுகளுக்கே அது வித்திடும் என்பதை அவர்கள் உணர்ந்து, விரோதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதால் ரஷ்யாவுக்கும் அதன் தலைவர்களுக்கும் என்ன இழப்பு நேரிடும் என்று ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் வினா எழுப்பினார்கள். மோதல்களுக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இதற்காகத் தான் பேச்சு வார்த்தைக்கான வழிகளை எப்போதும் திறந்திருக்கச் செய்தலும், பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளத்தக்க நிபந்தனையுடன் உடன்படிக்கையை உருவாக்குவதும் மிகவும் அவசியமாகும். எனினும் வரம்பு மீறிய பிரிவினர் இன்னமும் துன்பத்தையும், அழிவையும் ஏற்படுத்திக் கொண்டு அதிலிருந்து பின்வாங்க மறுத்தால், பழிவாங்குவதற்குப் பதிலாக அமைதியை நிலைநிறுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்தை எல்லா நேரத்திலும் உறுதிப்படுத்தியவாறு ஏனைய நாடுகள் ஒன்றிணைந்து சம அளவில் தேவையான வழிவகையைப் பயன்படுத்தி கொடுமைகளை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

இந்தப் போரின் மோசமான விளைவு என்னவென்றால், எதிர்தரப்பும் நேச நாடுகளும் தம் நிலையில் உறுதியாகிக் கொண்டே செல்வதும், பன்னாட்டு உறவுகளில் பயன்படுத்தப்படும் வார்த்தைகள் எல்லாத் தரப்பிலும் விரோதத்தை அதிகரித்துக் கொண்டிருப்பதாகவும் ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் எச்சரித்தார்கள். ரஷ்யாவும், சீனாவும் எவ்வாறு நெருங்கிய உறவு வைத்துள்ளனர் என்பதைப் பற்றி அதிகம் பேசப்படுகின்றன. உண்மை என்னவெனில் ஒரு போர் பெரும்பாலும் (மற்றொரு) போரைத் தூண்டி விடும். உக்ரைன் போர் மேலும் பரவக் கூடும் அல்லது மற்ற நாடுகள் அவர்களது பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான அரசாங்க ரீதியான முயற்சிகளைக் கைவிட்டு விட்டுப் பலவந்தத்தை நோக்கிச் செல்ல உறுதி-பூண்டு விடும் என்பது உண்மையாகவே கவலை அளிக்கிறது.

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் பத்திரிகையாளர் பீட்டர் ஹிட்சன் (Peter Hitchen) எழுதிய ஒரு கட்டுரையையும் குறிப்பிட்டார்கள். அதில் அவர் ரஷ்யா தனது சொந்த நிலமாகக் கருகிக் கொண்டிருக்கும் பகுதிக்குள் நுழைவதற்கு உக்ரைனுக்கு உதவி செய்ய பீரங்கிகள் வழங்கப்பட்டால், பின்னர் என்ன நிகழ்ந்தாலும் ஆச்சரியப்-படுவதற்கு இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து கூறுகிறார்: "ஆகையால் ஐரோப்பாவின் பெரும் பகுதிகள் கதிரியக்க மயானமாக மாறுவதற்கு உண்மையாகவே சாத்தியம் இருக்கின்றது. மேலும் இதற்கான அமெரிக்காவின் பழிவாங்குதல் நடவடிக்கை (அது பேராற்றலுடனும் பெரும் சீற்றத்துடனும் இருக்கும்). வழக்கமான போருக்குப் பின் தொடரும் திகில், பேரிழப்பு, உள்நாட்டுப்பூசல், கொள்ளை நோய் மற்றும் வறுமையை உள்ளடக்கிய ஓர் உலகமான மிக மோசமான நிலைக்கு நம்மை எடுத்துச் செல்லும்.

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் முன்னணி பொருளாதார நிபுணர் ஜெஃப்ரி சேக்ஸ் (Jeffrey Sachs) அவர்களின் கருத்தையும் எடுத்து வைத்தார்கள். அவரும் இதே தொனியில் தனது கவலையை வெளியிட்டவாறு கூறினார்: "நாம் கூட்டணிகளைத் திரட்டுகின்றோம். ஆயுதங்களைப் பலப்படுத்துகின்றோம். நமது தற்போதைய அணுகுமுறை இன்னும் ஒரு போருக்கான ஆயத்தக் குறியீடாக உள்ளது."

ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: "மனித வரலாற்றில் நாம் மிக மோசமான காலகட்டத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாக அறிஞர்கள், அரசியல் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள், மதிப்பிற்குரிய பகுப்பாய்வாளர்கள் மேலும் மேலும் எச்சரித்துக் கொண்டே இருக்கின்றனர். சர்வதேச விஞ்ஞானிகள் குழுமத்தின் கட்டுப்பாட்டில் இயக்கப்படும் அடையாள அழிவு நாளின் கடிகாரம் மனிதர்களால் நிகழவிருக்கும் உலகளாவிய பேரழிவுக்கான நேரம் நள்ளிரவு நேரத்தை முழுமைப்படுத்த இன்னமும் 90 வினாடிகளே எஞ்சி இருப்பதாக கணித்துள்ளது. உலகப் பேரழிவு இவ்வளவு மிக அருகில் இருப்பதாக இதற்கு முன்னர் எப்போதும் கணிக்கப்படவில்லை."

இவ்வகையில் இஸ்லாமிய போதனைகள் குறித்து கோடிட்டுக் காட்டியவாறு ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: "துன்புறுத்தலில் பலியானோருக்கு

மட்டும் உதவிடுமாறு முஸ்லிம்களுக்கு இஸ்லாம் கூற -வில்லை. மாறாக குற்றம் இழைத்தோர்க்கும், முன்னர் வரம்பு மீறிய பிரிவினருக்கும் உதவிடுமாறு இஸ்லாம் போதிக்கின்றது. இவ்வாறு செய்வதென்பது அவர்கள் செய்யும் கொடுமைகளை மேலும் அதிகப்படுத்துவதற்காக அல்ல. மாறாக அவர்கள் அவ்வாறு செய்வதிலிருந்து தடுப்பதற்காகவே ஆகும்.”

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தொடர்ந்து கூறினார்கள்: “ரஷ்ய நாட்டினரால் எந்த அளவு குற்றங்கள் இழைக்கப்பட்டாலும் நாட்டின் பரந்த நிலைமைகளை நாம் மனதில் கொள்ள வேண்டும். அது என்னவெனில், போரை நாம் ஒரு முடிவுக்கு கொண்டு வராவிட்டால் அது மிக ஆழமான உலகளாவிய நெருக்கடிக்கு வழிகோலும்.” எனவே உலக வல்லரசுகள் அமைதிப் பேச்சுவார்த்தை மூலம் இந்தப் போரை கண்டிப்பாக முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். இல்லையெனில், இது கட்டுப்பாடிழந்து ஒரு முழுமையான உலகளாவிய அணு ஆயுதப் போராக மாறி விடும். கற்பனைக்கு எட்டாத அதன் நாச விளைவுகள் குறித்து பல ஆண்டு காலமாக தாம் எச்சரித்துக் கொண்டே இருப்பதாகவும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்.

நிறைவாக, ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள்: “எல்லாம் வல்ல அல்லாஹ் மக்களுக்கு ஞானத்தை வழங்குவானாக! இவ்வுலகைப் படைத்தவனும் எஜமானனும் நம்மிடம் விரும்புகின்ற பிரதான குறிக்கோள்களைச் செயல்படுத்துபவர்களாக மனித இனம் முழுவதையும் ஆக்குவானாக! இறைவனது உரிமைகளையும் அவனது படைப்பினங்களின் உரிமைகளையும் நிறைவேறச் செய்வானாக!”

இந்நிகழ்ச்சி ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் துஆவுடன் முடிவுற்றது.

*(19 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

72. ‘மூத்தா’ யுத்தத்தில் தளபதியை நியமனம் செய்யும் போது பெருமானார் (ஸல்) அவர்கள் வேறு என்ன நிபந்தனைகள் வழங்கினார்கள்?

பெருமானார் (ஸல்) அவர்கள் ஸெய்தைத் தளபதியாக நியமித்து விட்டு ‘போரில் ஸெய்து கொல்லப்பட்டால் ஜாபிர் பின் அபூதாலிப் அவருடைய இடத்தை வகிக்க வேண்டும். அவரும் இறந்து விட்டால் அபதுல்லாஹ் பின் ரவாஹா அந்த இடத்தை நிரப்ப வேண்டும் என்றும் அவரும் கொலை செய்யப்பட்டு விட்டால் முஸ்லிம்கள் தமது தளபதியைத் தாமே தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும் என்றும் கட்டளையிட்டார்கள்.

73. அந்த யுத்தத்தில் முஸ்லிம்களுக்கு என்ன நேர்ந்தது?

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறியது போன்றே முதலில் ஸெய்து கொல்லப்பட்டார். அதன் பின்பு ஜாபரும் அதன் பின்பு அப்துல்லாஹ்வும் தமது உயிரை இழந்தார்கள். அதன் பின்பு முஸ்லிம்கள் தமது தலைமைப் பொறுப்பை ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தனர்.

74. பெருமானார் (ஸல்) அவர்கள் எப்போது காலமானார்கள்?

கி.பி. 632-ஆம் ஆண்டு தமது 63-வது வயதில் மதீனாவில் பெருமானார் (ஸல்) அவர்கள் காலமானார்கள்.

75. பெருமானார் (ஸல்) அவர்களின் மறைவிற்குப் பிறகு கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது யார்?

ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களின் மறைவிற்குப் பின்னர் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்டபட்டார்கள்.

(தொடரும்...)

## ஓர் ஏழை அஹ்மதி பெண்ணின் பொருள் தியாகம்

இது, காதியானின் ஆரம்ப காலத்தில் நடந்த சம்பவமாகும்..... ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சபையில் பொருள் தியாகம் தொடர்பாக எடுத்துக் கூறினார்கள். இந்த ஆதரவற்ற ஏழைப் பெண்ணுக்கு செல்வந்தர்கள் தியாகம் செய்து கொண்டே இருக்கின்றனர். ஆனால், எனக்கு அந்த நற்பாக்கியம் கிடைக்காமல் இருக்கின்றது என்ற ஆதங்கம் ஏற்பட்டது. அதனால் அந்த பெண் நிம்மதியிழந்து காணப்பட்டார். மிகவும் நிம்மதியிழந்த நிலையில் அங்கிருந்து எழுந்து அவர் வீட்டிற்குச் சென்றார். வீட்டிலுள்ள எல்லாவற்றையும் விற்று அதன் மூலம் கிடைத்த தொகையை ஆரம்பத்திலேயே அவர் சந்தாவாக கொடுத்திருந்தார். வராந்தாவில் ஒரு கோழி இருந்தது அவரது கண்ணில் பட்டது. அவர் அந்த கோழியைக் கொண்டு வந்து ஹுஸூர் அவர்களிடம் கொடுத்தார். பிறகு நிம்மதியிழந்த நிலையில் வீட்டிற்குத் திரும்பி வந்து மூன்று முட்டைகளை எடுத்துக் கொண்டு வந்து அதையும் அவர் வழங்கினார். தியாகம் பற்றிய உணர்வு எந்த அளவு அதிகமாக அவருக்கு இருந்தது என்றால் அமைதியாக உட்காருவது அவருக்கு மிகவும் கடினமானதாக இருந்தது. அந்த சபையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்ந்து உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். அவர் எழுந்து மீண்டும் தனது வீட்டிற்குச் சென்று தான் கொடுப்பதற்கு வீட்டில் ஏதாவது பொருள் இருக்கின்றதா என்று பார்வையிட்டார். அந்த பெண்ணின் கணவர் உடைந்து போன ஒரு கட்டிலில் அமர்ந்திருந்தார். கணவர் அவளிடம் இப்போது நீங்கள் என்ன தேடிக்கொண்டிருக்கின்றீர்கள்? எல்லா -வற்றையும் நீங்கள் கொடுத்து விட்டீர்கள். வீட்டில் இப்போது எதுவும் இல்லை என்று கூறினார். தன்னிடம் இருந்த அனைத்தையும் இறைவனின் வழியில் வழங்கி விடுவதாக சபதம் எடுத்திருந்த அந்த பெண் மிகவும் கோபத்துடன் தனது கணவரைப் பார்த்து அமைதியாக இருங்கள். எனக்கு சக்தி இருந்தால் உங்களையும் விற்று அந்தத் தொகையை சந்தாவாக கொடுத்திருப்பேன் என்று கூறினார்.

(அஹ்மதிய்யத் னே துன்யா கோ கியா தியா பக்கம் 49)

# புதிய முபல்லிக்மார்களுக்குப் பிரியாவிடை கொடுக்கும் நிகழ்ச்சி

புனித காதியான் தாருல் அமானில், மே 26, 2023 அன்று வெள்ளிக்கிழமை இஷா தொழுகைக்குப் பிறகு, இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தலைவர் மதிப்பிற்குரிய K. தாரிக் அஹ்மது சாஹிப் அவர்கள் தலைமையில் நிகழ்ச்சி ஆரம்பமானது.

இந்த நிகழ்ச்சியில், ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானிலிருந்து தேர்ச்சி பெற்று, பயிற்சி காலம் நிறைவடைந்து இவ்வாண்டு (2023) செயல் களத்திற்கு செல்லும் புதிய முபல்லிக்மார்கள் கோவையைச் சேர்ந்த மதிப்பிற்குரிய U. இர்ஃபான் அஹ்மது சாஹிப் அவர்கள் மற்றும் மாரனேரியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய G. அஹ்மது சுலைமான் சாஹிப் அவர்கள் ஆகிய இருவருக்கும் பிரியா விடை கொடுக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், காதியானில் பணிபுரியும் தமிழ்நாட்டைச் சேர்ந்த வாழ்வை அர்ப்பணித்த மக்களும், ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானில் கல்வி பயின்று கொண்டிருக்கும் தமிழ்நாடு மாணவர்களும் கலந்து கொண்டனர்.

ஜமாஅத் வழக்கப்படி திருக்குர்ஆன் திலாவத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. அதையடுத்து நஸ்ம், வரவேற்புரை ஆகியவற்றைத் தொடர்ந்து கூட்டத்தின் தலைவர் மதிப்பிற்குரிய K. தாரிக் அஹ்மது சாஹிப் அவர்கள் ஜாமிஆவில் கல்வி பயின்று செயல்களத்துக்குச் செல்லும் புதிய முரப்பிமார் –களுக்குக் குறிப்பாகவும், தற்போது ஜாமிஆவில் கல்வி பயின்று கொண்டிருக்கும் மாணவர்களுக்குப் பொதுவாகவும் சில வழிகாட்டல்களை வழங்கினார்கள்.

பிறகு அனைவரின் சார்பாகவும் புதிய முபல்லிக் – மார்களுக்கு ஒரு சிறு நினைவுப்பரிசை கூட்டத்தின் தலைவர் அவர்கள் வழங்கினார்கள். பிறகு, துஆவுடன் கூட்டம் இனிதே நிறைவடைந்தது. இதை அடுத்து வருகை தந்திருந்த அனைவருக்கும் இரவு உணவுக்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. அல்ஹம்துலில்லாஹ்!







அறிக்கை: இப்னு வஸீம், காதியான்